ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

47] பிரபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள் 10-12-87 [இதழ் 1



அருள் வழங்கும் அம்மை ஸ்ரீ அபிராமி

நாற்பத்தேழாம் ஆண்டில் பீடுநடை இடும்

ஞானசம்பந்தம் மலரின் முதல் இதழை அலங்கரித்து அருள்வழங்கும்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்

உ
குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

அந்நிலையா னும்பிறவு
  மான்மாநந் தத்திறமாம்
என்னிலையே சித்திக்கு
  மென்றியம்பில்–உன்னிலைதான்
இல்லதென வேநீ
  மியம்பு மளவைமுதல்
சொல்லுமது கேளாய் துணிந்து.

— முத்திநிச்சயம் 3

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 47 || 10–12–87 || இதழ் 1

உட்பொருள்

எண்		பக்கம்
1	புத்தாண்டில் ஞானசம்பந்தம் ...	1
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	6
3	அச்சுமாறிவரும் ஆன்மா	11
4	பொன்விழா ஆண்டை நோக்கி...! ...	16
5	அபிராமி அந்தாதி ...	17
6	மேலைநாட்டுத் தத்துவ மேதைகள் —	21
7	திருவருட்பாத் திரட்டு	25
8	செயல்படும் விமரிசனம்	29
9	வைச்வதேவம் ...	33
10	ஏயர்கோன் கலிக்காமர்	35
11	செய்திகள் ...	41
12	எதிர்காலம் ...	44
13	இதழ்வழிச் சைவசமயக் கல்வி III பாடம் - 11 ...	49

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 47 ★ இதழ் 1

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

பிரபவ கார்த்திகை 10—12—1987

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

புத்தாண்டில் ஞானசம்பந்தம்

தோற்றமும் வளர்ச்சியும் :

ஞானசம்பந்தம் தனது 46 ஆண்டுக் காலப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி 47 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. தருமை ஆதீனத் திங்கள் இதழான ஞானசம்பந்தம் 47 ஆவது ஆண்டில் அடியெடுத்துவைக்கும் இந்த இனிய நேரத்தில் தன்னை வளர்த்து வரும் அருளாளர்களையும், போற்றிச் சிறப்பித்து வரும் வாசகர்களையும் நன்றியுடன் நினைவு கூர்ந்து மகிழ்ச்சி யடைகிறது. காலத்தின் தேவையறிந்து கி. பி. 1941 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஞானசம்பந்தத்தை ஒரு திங்கள் இதழாக வெளியிடத் திருவுள்ளங்கொண்ட தருமை ஆதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், ஒடுக்கம் ஸ்ரீமத் சிவகுருநாதத்தம்பிரான் என்ற திருநாமத்துடன் இதன் முதல் ஆசிரியராக அமர்ந்தும்,

பின்னர் தருமை ஆதீன 25 ஆவது குருமகாசந்நிதானமாக அருளாட்சி ஏற்று இதனைப் புரந்தும் வளர்த்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களும், ஒடுக்கம் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் என்ற திருநாமத்துடன் இதன் ஆசிரியராக அரும்பணியாற்றியும் பின்னர், ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் என்ற திருநாமத்துடன் தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானமாக அருளாட்சி ஏற்றது முதல் திங்கள் தோறும் இனிய தமிழில் அருளாசியுரை வழங்கியும் வளர்த்து வருகிறார்கள்.

கடந்து வந்த பாதை :

47 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்நேரத்தில் ஞானசம்பந்தம் தன் கடந்த காலப் பணிகளை நினைவு கூர்ந்து மகிழ்கிறது. தனது தலையாய குறிக்கோளாக ஞானசம்பந்தம் சிவநெறியையும் செந்தமிழையும் வளர்ப்பதை உறுதியுடன் நிறைவேற்றி வந்துள்ளது. திருமுறை, சைவசித்தாந்தம், சமய இலக்கியங்கள் முதலியவற்றை ஆய்வு நோக்கில் எளிய இனிய தமிழில் அறிஞர்களைக் கொண்டு கட்டுரைகள் வடிக்கச் செய்து முறையாக வெளிப்படுத்தி வந்திருக்கிறது. சுவடி பெயர்த்து மூல நூல் வெளிப்படுத்துதல், அரிய நூல்களுக்கு உரைகண்டு வெளியிடல், கடின நூல்களை உரைநடையாக்கி வழங்குதல், வினா - விடை வடிவில் சாத்திரங்களின் நுட்பங்களை மக்கள் உளங்கொள்ளுமாறு எழுதுவித்து வெளிப்படுத்துதல் முதலிய பல்துறை முயற்சிகளை இடைவிடாது ஞானசம்பந்தம் மேற்கொண்டு வந்துள்ளது. தமிழ் இலக்கண - இலக்கியங்கள் குறித்த ஆய்வுக் கட்டுரைகளையும், சமயம், இலக்கியம், சமூகம் குறித்த வரலாற்றுப் பதிவுகளையும், கல்வெட்டு, தொல்பொருள் ஆய்வு, சிற்பம், ஓவியம், இசைமரபு முதலான பல்துறை நுட்பங்களையும் வெளியிட்டு ஆய்வறிஞர்களின் பார்வை நூலாக மதிக்கத்தக்க பெருமையை ஞானசம்பந்தம் எய்தியுள்ளது.

தடம் மாறாத பயணம் :

காலத்தின் தேவையுணர்ந்து அவ்வப்போது சிற்சில மாற்றங்களை ஞான்சம்பந்தம் மேற்கொண்டாலும், மரபு வழிப்பட்ட பண்பாட்டுத் தடத்திலிருந்து அது கீழ் இறங்கியதே இல்லை. மக்களுக்கு விருப்பமானதைத் தருவது ஞானசம்பந்தத்தின் குறிக்கோளன்று. மக்களுக்கு எது நன்மை பயக்கும் என்பதை ஆராய்ந்து அதனை இனிமை கூட்டி வழங்குவதே அதன் தலையாய நோக்கம். மக்களுக்கு அறிவூட்டுதலும், நெறிப்படுத்தி மன வளர்ச்சி அடைவித்தலும் பத்திரிகைகளின் தலையாய கடமைகள். இவற்றைத்

தமிழகத்தில் வெளியிடப் பெற்று வரும் பல, வார, மாத இதழ்கள் ஓரளவு செய்தே வருகின்றன. தீமைக் கூறுகள் மிகுதியாகவும், நன்மைக் கூறுகள் குறைவாகவும் இடம் பெறுவதால் இத்தகு இதழ்களால் மக்களை நெறிப்படுத்தக் கூடவில்லை. விற்பனையை மட்டுமே நோக்கமாகக் கொள்ளாமல், மக்கள் மன வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு அவை செயற்பட்டால் சமூகம் உயரும். இத்தகைய சூழ்நிலையில் ஞானசம்பந்தம் மேலும் முனைப்புடன் செயற்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்து செயற்பட்டு வருகிறது. தீமைகளை விரும்பியேற்கும் நாட்டம் குறைந்து மக்கள் நன்மைகளை அடைய விழையும் காலம் உருவாகும். அதுவரை ஞானசம்பந்தம் போன்ற இதழ்கள் தளர்ந்துவிடாது பணியாற்றியே ஆகவேண்டும்.

பொறுப்புணர்வுத் தலையங்கம் :

ஞானசம்பந்தத்தின் அமைப்பையும், உள்ளீடுகளையும் உற்று நோக்குவார் அதன் குறிக்கோள்களை உணர இயலும். ஒவ்வொரு இதழிலும் ஞானசம்பந்தம் மிகுந்த பொறுப்புணர்வுடன் தலையங்கம் ஒன்றை முன்னதாக எழுதி வெளிப்படுத்துகின்றது. தனது எல்லைகளை உணர்ந்து, குறிக்கோள்களிலிருந்து வழுவாது அதே நேரத்தில் அச்சமின்றி, சமூக நலங்குறித்த பல்வேறு கொள்கைகளை ஞானசம்பந்தம் துணிவுடன் விமர்சித்துத் தன் கருத்தை வெளியிடுகிறது. மொழிக்கும், சமயத்திற்கும், சமூகத்திற்கும் ஊறு விளைவிக்கும் எந்த ஒரு நிகழ்ச்சியையும் அது கண்டிக்கத் தவறுவதே இல்லை. அதே நேரத்தில் நல்லோரைப் போற்றவும், நன்மைகளை வரவேற்கவும் ஞானசம்பந்தம் பெருவிருப்பம் காட்டி வந்துள்ளது. தமிழகத்தில் பல பத்திரிகைகள் தங்களுக்கென்று ஒரு விருப்பத்தை முன்னரே வரித்துக்கொண்டு, விருப்பமானவற்றை ஏற்றும், விருப்பத்திற்கு மாறானவற்றைத் தூற்றியும் எழுதுவதைக் காண்கின்றோம். ஆனால் ஞானசம்பந்தம் சமூகப் பொறுப்புணர்வோடு நடுநிலை நின்று 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் – எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும்' அப்பொருள் மெய்ப்பொருள் காணும் துணிவினைத் தன் தலையங்கங்களில் காட்டி வருகிறது.

வழிகாட்டும் அருளாசி :

கடந்த பதினாறு ஆண்டுகளாக ஞானசம்பந்தம் திங்கள்தோறும் தருமைக் குருமணியின் அருளாசியைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆதீனத் திருமடத்திலும், எழுந்தருளும் இடங்களிலும் வழங்கியருளி

ஆசியுரைகளை ஞானசம்பந்தம் மிகுந்த மகிழ்வுடன் வெளியிட்டு வருகிறது. 'இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே. ஒழுக்க முடையார் வாய்ச்சொல்' என்பார் வள்ளுவர். கல்வியும், ஞானமும், கடுந்துறவொழுக்கமும் கொண்டிலங்கும் தருமைக் குருமணி அவர்களின் ஆசியுரைகளைப்படித்துப் பயன்பெற்றோர் பலராவர். அது குறித்து வரும் வாசகர் கடிதங்கள் ஆசியுரையின் பயன்பாட்டிற்குச் சிறந்த சான்றுகளாக அமைகின்றன. திருவருள் உள்நின்று உணர்த்தவும், தங்கள் ஆழ்ந்த சிந்தனையின் வெளிப்பாடாகவும் அமையும் ஆசியுரைகள் வாசகர்களை மெய்சிலிர்க்க வைப்பன. வாழ்வியலிலும், சமய இலக்கியங்களிலும் குருமணிகள் கண்டு காட்டும் நுட்பங்கள் கற்றோர்க்குப் பேரின்பம் தருவன. ஆசியுரைகளோடு திங்கள் தோறும் ஆங்கில மாதம் முதல் ஞாயிறன்று குருமணிகள் அன்பர்களிடையே வழங்கியருளும் பெரியபுராணச் சிந்தனைகளும் ஞானசம்பந்தத்தில் இடம்பெறுகின்றன. இவற்றை வழங்கியருளி ஞானசம்பந்தத்தில் வெளியிட அருள்பாலிக்கும் குருமணிகளுக்கு நன்றி செலுத்தும் கடப்பாடுடையோம்.

பல்துறைப் பணிகள் :

தலையங்கம், ஆசியுரை அல்லாது, ஞானசம்பந்தம் திங்கள் தோறும் பல அரிய கட்டுரைகளை, பலவேறு துறையைச் சார்ந்த அறிஞர்களிடம் பெற்று வெளியிட்டு வருகின்றது. தருமை அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பாக ஞானசம்பந்தம் கடந்த மூன்று ஆண்டுகளாக இதழ்வழிச் சமயப் பயிற்சியை நடத்தி வருகிறது. தக்க அறிஞர்களைக் கொண்டு திருமுறை – சைவசித்தாந்தம் தொடர்பான பாடங்களை எழுதச் செய்வித்து வினாக்கள் அமைத்து இதழ் இறுதியில் வெளியிட்டு வருகிறது. இப்பாடங்கள் தனியே பிரித்தெடுத்துச் சேகரித்துப் படிக்குமாறு வெளியிடப்படுகிறது. 'நாள் செய்வதை நல்லவர்களும் செய்யார்' என்பது பழமொழி. அதற்கிணங்க, பன்னிரு ராசிகளுக்கும் உரிய மாதப் பலன்கள் தக்கவர்களைக்கொண்டு கணித்து வெளியிடப் பெற்று வருகிறது. எதிர்வரும் திங்களில் வரும் விழாக்கள், மற்றும் சான்றோர் நினைவு நாட்களும் வெளியிடப்படுகின்றன. ஆதீனம், ஆதீன தேவஸ்தானங்களில் நடைபெறும்விழா நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளையும், ஆதீன நூல்வெளியீடுகள் பற்றிய விபரங்களையும், சிறந்த நூல்களுக்குரிய மதிப்புரைகளையும் ஞானசம்பந்தம் அவ்வப்போது வெளியிட்டு வருகின்றது. சமய உணர்வை வளர்க்கும் நோக்கில் சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தி,பரிசுபெற்றகதைகளையும்,தகுதியுடைய வேறு கதைகளையும், கவிதைகளையும் ஞானசம்பந்தம் வாசகர்களுக்கு வழங்கிவந்துள்ளது.

விழைவும், வேண்டுகோளும் :

புதிய ஆண்டில் அடியெடுத்துவைக்கும் ஞானசம்பந்தம் சமய, மொழி அறிஞர்கள் மற்றும் வாசகர்களின் ஒத்துழைப்பினைப் பெரிதும் எதிர்பார்க்கிறது. ஞானசம்பந்தம் வணிக நோக்கில் நடத்தப்படவில்லை என்பதை அனைவரும் அறிவர். தமிழார்வம் மிக்க சைவசமயத்தார் அனைவர்க்கும் ஞானசம்பந்தத்தின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்கும் பொறுப்பு உண்டு. சமய, மொழி அறிஞர்கள், தகுதி மிக்க வாசக அன்பர்கள் தங்கள் சீரிய சிந்தனைகளைக் கட்டுரை, கவிதை வடிவில் வழங்கலாம். ஞானசம்பந்தத்தில் காலத்தின் தேவை கருதி எவ்வகை மாற்றங்களைச் செய்யலாம் என ஆலோசனைகள் வழங்கலாம். வெளிவரும் படைப்புக்களில் காணப்படும் குறை நிறைகளைச் சுட்டிக்காட்டிக் கடிதம் எழுதலாம். தரமான கடிதங்களை ஞானசம்பந்தம் வெளியிட்டு மகிழும். ஞானசம்பந்தம் சில ஆயிரம் படிகளே வெளியிடப்படுகிறது. ஆண்டுச் சந்தா, ஆயுட் சந்தா உறுப்பினர்களைச் சேர்த்து, இத்தகு தரமான ஓர் ஏடு பல்லாயிரவர்க்கும் பயன்படுமாறு உதவலாம். இவ்வாறான ஞான சம்பந்தம் வளர்ச்சி முயற்சிகளில் அன்பர்கள் ஆர்வங்காட்ட வேண்டுமென்ற வேண்டுகோளுடன் புதிய ஆண்டில் தன் பணியைத் தொடர ஞானசம்பந்தம் குருவருளையும், திருவருளையும் சிந்தித்துத் தன் பயணத்தைத் தொடர்கிறது.

வாழ்க இதழின் தொண்டு !

வளர்க வாசகர்கள் !

மாதங்களில் மார்கழி

மார்கழிமாதம் மற்றைய மாதங்களைவிட மேலானது. அதற்குக் காரணம் அது தேவர்கட்கு வைகறைப் பொழுதாக இருப்பதே யாகும். அதனால் இம்மாதம் முழுவதும் விடியலில் எழுந்து நீராடி, சூரிய உதயத்திற்கு முன்பே வழிபாட்டினை முடிக்கவேண்டும் என்பது நியதி.

மார்கழி மாதம் பீடுடைய (பெருமையுடைய) மாதயேயன்றிப் பீடை மாதமன்று.

மார்கழிமாதம், வழிபாட்டிற்கே உரியமாதம் என்பதுபற்றியே மற்றைய உலகியல் நிகழ்ச்சிகளில் ஒன்றையும் இதில் செய்தல் கூடாது என்று பெரியோர்கள் விலக்கியுள்ளனர்.

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஆயில்யத் திருநாளன்று ஆனந்த தாண்டவபுரத்திலுள்ள ஸ்ரீ பெரியநாயகி உடனுகிய ஸ்ரீ பஞ்சவடீசுவரர் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றி

வித்யா வாசஸ்பதி

பிர்மஸ்ரீ. P. இராமதாச ஐயர்

இல்லத்தில் அளித்த வரவேற்பை ஏற்று

வழங்கியருளிய

ஆசியுரை

17—10—1987

''மேலாறு செஞ்சடைமேல் வைத்தவர் தாம் விரும்பியது
நூலாறு நண்குணர்வார் தாம் பாடும் நோன்மையது
கோலாறு தேன்பொழியக் கொழுங்கனியின் சாறொழுகும்
காலாறு வயற்கரும்பின் கமழ்சாறூர் கஞ்சாறூர்''

— திருத்தொண்டர் புராணம்.

ஜன்ம நட்சத்திர விழா :

தருமை ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளாட்சிக் காலம்முதல் அவர்களின் ஜன்ம நட்சத்திரமாகிய அஸ்தத்திருநாள் விழாவினைப் பாடல்பெற்ற திருக்கோயில்கள் 275 இலும் சிறப்பான அபிடேக ஆராதனைகளுடன் வழிபாடு நிகழ்த்திக் கொண்டாடப்பெற்றது. அதைத் தொடர்ந்தே இப்பொழுதும் அவ்வழிபாடு ஆயில்யத் திருநாளன்று நடைபெற்று வருகிறது. அவ்வரிசையில் காவிரியின் வடகரை, தென்கரைத்தலங்கள் முழுமையும்முற்றுப்பெற்றுள்ளது.

இனித் திருக்கயிலாய வழிபாடும் இலங்கையிலுள்ள திருக் கேதீச்சரம், திரிகோணமலையாகிய இருகோயில்கள் வழிபாடும் எஞ்சியுள்ளன. அவற்றைத் திருவருள் கூட்டுவிக்கும் பொழுது நிகழ்த்தப்பெறும். அதுவரையில், தேவாரத்தில் வைப்புத் தலங் களிலும் நாயன்மார்கள் அவதரித்த தலங்களிலுள்ள திருக்கோயில் களிலும் ஜன்மநட்சத்திர வழிபாட்டினை வைத்துக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் இன்று, இங்குக் காவிரியின் வடகரை யிலுள்ள வைப்புத்தலமாக விளங்கும் கஞ்சாறூர் என்னும் ஆனந்த தாண்டவபுரத்தில் வழிபாடு நிகழ்கிறது. இத்தலம் குறிப்பிட்டதுபோல் இருவகையிலும் பொருத்தமான தலமாக அமைந்துள்ளது. வைப்புத்தலமாக இலங்குவதுடன் நாயன்மார் அவதரித்த தலமாகவும் விளங்குவது இதற்குள்ள தனிச்சிறப்பு. இனி, இவ்வூர் பற்றிய சிறப்புக்களைச் சிந்திக்கலாம்.

ஆனந்த தாண்டவம் :

முதலாவதாக ஊரின் பெயர் பற்றிய கருத்துக்களைச் சிந்திப்போம். ஆனந்த தாண்டவபுரம் என்பதே இன்று ஆன தாண்டபுரம் என்று மருவி வழங்குகிறது. இவ்வூரின் பெயரில் ஒரு முனிவரின் வரலாறு உள்ளது. ஆனந்தர் என்னும் அம் முனிவர் சிவபக்தியில் சிறந்திருந்தார். அவர் யோக சித்தியில் தேர்ந்தவர். அச்சித்தியினைக்கொண்டு நாள்தோறும் தனுஷ்கோடியில் நீராடிப் பின் சிவதலங்களை வழிபாடு செய்வார். பின், பஞ்சாட்சர ஜபம் செய்வார். அதன்பின், தில்லை நடராஜப் பெருமானை வழிபட்டு அன்றே மகேந்திர மலைக்குச் சென்று சிவத்தியானத்தில் திளைப்பார். இவ்வண்ணமே நாளும் சிவபுண்ணியம் செய்துவந்தார். ஒரு மார்கழித் திருவாதிரைத் திருநாளில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது அன்று தனுஷ்கோடியில் நீராடிச் சிதம்பரம் செல்ல யோக முயற்சி செய்த முனிவருக்குப் பெருமழை காரணமாகத் தடை நிகழ்ந்தது. இத்தலத்தைக் கடந்து மேலே செல்ல இயலாதவரானார். தில்லை ஸ்ரீ நடராசர் தரிசனம் கிடைக்கவில்லையே என வருந்தினார். தன்னுடைய நியதியில் தடை ஏற்பட்டமையால் தன் உயிரைப் போக்கிக் கொள்ள முயன்றார். உடனே இறைவன் முனிவரின் செயலைத் தடுத்து, ஆனந்தவிமானத்தில் உமையம்மையும் அருகில் நின்றருள, ஆனந்த தாண்டவம் ஆடிக் காட்டியருளினார். இதனைக் கண்டு முனிவர் பெரிதும் மகிழ்ந்தார். தில்லை நடராசர் ஆனந்த தாண்டவத்தை ஆனந்த முனிவருக்கு இத்தலத்தில் ஆடிக் காட்சி யருளியமையால் இவ்வூருக்கு ஆனந்த தாண்டவபுரம் என்னும் பெயர் இன்றும் நிலைத்து வழங்கி வருகிறது.

கஞ்சாறூர் :

இந்நிகழ்ச்சிக்கு முன்பு இவ்வூர் கஞ்சாறூர் என்னும் பெயரில் வழங்கி வந்திருத்தல் வேண்டும். ஏனெனில் தேவாரத்தில் இத் தலம் 'கஞ்சாறூர்' என்று வழங்கப் பெறுகிறது. அப்பர் சுவாமிகள்,

" கஞ்சனூர் கஞ்சாறு பஞ்சாக்கையும்
கயிலாய நாதனையே காணலாமே "

என்று இத்தலத்தைக் 'கஞ்சாறு' என்னும் பெயரில் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்தில் வைப்புத் தலமாகக் குறித்தருளு கின்றார். இக்கஞ்சாறு என்னும் தலமே ஆனந்த தாண்டவபுரம் என்பது ஆய்வறிஞர்கள் கண்ட முடிபு.

சமயப் பொதுமை :

ஜன்ம நட்சத்திரநாள் போன்ற நல்லநாட்களில் திருக்கோயில் வழிபாடு செய்வது மிகவும் நலமாகும். அதனால், பாடல்பெற்ற திருக்கோயில்கள், வைப்புத் தலங்களிலுள்ள திருக்கோயில்கள், நாயன்மார்கள் அவதரித்த ஊர்களிலுள்ள திருக்கோயில்கள் ஆகியவற்றில் வழிபாடு நிகழ்த்தி, ஆங்காங்குள்ள மக்களைச் சமய உணர்விலும், வழிபாட்டிலும் ஈடுபடுத்தத் திட்டமிட்டு இவ் வழி பாடு நடைபெற்று வருகிறது. இறையருளால் சில இடங்களுக்கே நாமும் சென்று வழிபட இயல்கின்றது. என்னதான் முயன்றாலும் வருவதுதான் வரும். இதுவே சைவம் கற்றுத்தருகிற பாடமாகும். அதனால்தான் ஸ்ரீ குருஞானசம்பந்தர்,

" நீயியற்ற ஓர் பொருளை நிச்சயித்த நாயேனும்
போயியற்றல் செய்யப் புரிகுவேன் — நீயியற்றல்
ஆக்கா தணுவும் அசையுமோ அவ்விகற்பந்
தாக்காத சொக்கநா தா "

என்று அழுத்தமாக விளங்கி யருளினர். எனவே எல்லாம் அவன் செய்கிறான்; நாம் ஒரு கருவிதான் என்பதை ஆன்மீக அறிஞர்கள் யாரும் மறந்துவிடக் கூடாது. எதனையும் படிப்பதோடு நின்று விடாமல் பின்பற்றவும் அதன்வழி ஒழுக்கமுடையோராய்த் திகழ வும்முயலவேண்டும். எல்லாவற்றிற்கும்மேலாகச் சமயநெறிநிற்கும் மக்கட்குச் சமரச ஞானம் மிகவும் அவசியம். எல்லாச் சமயங் களுமே நல்லனவற்றைப் போதிக்கவே தோன்றின. அன்புதான் எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படை மந்திரம். அதன்வழி நடந்து அனைத்துயிர்களையும் நேசிப்பதையே எல்லாச் சமயங்களும் கற்றுத்

தருகின்றன. இவ்வூரில் சைவக் கோயிலும் வைணவக் கோயிலும் இருக்கின்றன. சைவம் தந்தையாகத் திகழ்கிறது. வைணவம் தாயாகத் திகழ்கிறது. தந்தையிடத்தும் தாயிடத்தும் வேறுபாடு காணலாமே தவிர மாறுபாடு காண இயலாது. வேறுபாடு இயை புடையது. இணைந்து செல்வது. மாறுபாடு முரண்பாடுடையது. தந்தை கட்சி, தாய் கட்சி என்று பிரிந்துநிற்றல் வளர்ச்சிக்கு வழிஆகாது. இவ்வொருமைப்பாட்டை விளக்கவே சிவபெருமான் பிக்ஷாடனராகிய ஆணுகவும், திருமால் மோகினி அவதாரம் கொண்ட பெண்ணுகவும் உருக்கொண்டனர். சமய ஒருமைப் பாட்டை விளக்குவதே ஹரிஹரபுத்திரன் அவதாரம். திருமாலைப் புருஷசக்தி என்றும் கூறுவது வழக்கம். திருமாலின் உந்தித் தாமரையில் பிரமன் தோன்றியதும் திருமாலின் தாய்த் தன்மையை உணர்த்தும். சிதம்பரத்தில் பள்ளி கொண்ட கோவிந்தராஜப் பெருமாளின் அமைப்பிலும் ஒருபெண் படுத் திருக்கும் நிலையைக் காணலாம். வலப்பக்கத்தைக் கீழே வைத்தும் இடப்பக்கத்தை மேலே வைத்தும் பள்ளிகொண்டிருப்பது சான்று ஆகும். "குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி, வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி" என்ற ஆழ்வார் அருளிச் செயலும் இதனைப் புலப்படுத்தும். இங்ஙனம் சைவம் வைணவம் மட்டுமல்லாது எல்லாச்சமயங்களிலும் கருத்து ஒற்றுமைகளைக் கண்டு தத்துவ உண்மைகளை உணர்ந்து ஒன்று பட்டால் வாழ்வு வளம் பெறும். அத்துறையில் அன்பர் அனைவரும் முயல்வார்களாக!

அடியார் பெருமை :

இனி இவ்வூரில் அவதரித்த அடியாரின் வரலாறு குறித்துச் சிந்திப்போம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் மானக்கஞ்சாறர் என்பார் ஒருவர். வேளாளர் குடியில் பிறந்த இவர், படைத்தலைமை பூண்டு நாட்டுப்பணி புரிந்தார். சிவபெருமானிடத்தும் சிவனடியார் களிடத்தும் பேரன்பு கொண்டிருந்தார். இவர் நெடுநாள் மகப் பேறின்மையால் இறையருளை வேண்டியதன் பயனுக ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தார். இப்பெண்ணின் பெயர்பற்றிப் பெரிய புராணம் ஒன்றும் கூறவில்லை. ஆனல் தல மகாத்மியம் புண்ணிய வர்த்தனி என்று கூறுகிறது. இத்திருமகளின் திருமணத்தன்று சிவபெருமான் மாவிரத முனிவர் வேடம் தாங்கிவந்து இம் மகளாரின் கூந்தலைத் தம் பஞ்சவடிக்காம் (மயிர்ப்பூணூல்) எனக்

கூறியருளினர். குறிப்பறிந்து கொடுக்கும் நாயனர் சிறிதும் யோசியாமல் மகளின் கூந்தலை அரிந்து கொடுத்தார். இறைவனும் நாயனருக்கு உமையொருபாகனுகக் காட்சி தந்தருளினர். பின் இறையருளால் அப்பெண்ணின் கூந்தலும் வளர்ந்து திருமணம் இனிதே நடைபெற்றது. இம்மகளாரை மணம்செய்து கொண்டவரும் ஒரு நாயனரே! அவர்தாம் ஏயர்கோன்கலிக்காமர் என்பவர். இங்ஙனம் மாமனரும் மருமகனும் நாயன்மார்களாக இலங்கும் குறிப்பு ஈண்டுச் சிந்தித்து மகிழத்தக்கது.

பெண்ணின் தகவு :

இவ்வரலாற்றில், இப்பெண், தம் திருமணத்திற்கு முன்பு நாயனராகிய தம் தந்தைக்கு உதவும் பேறுபெற்ருர். பொதுவாக உலக வழக்கில் ஆண்மகவைப் பெற்றெடுத்தாலேயே, அம்மகன் பிற்பாடு செய்யும் நீர்க்கடன் போன்ற காரியங்களால் தந்தைக்கு மேலான கதி கிடைக்கும் என்பர். ஆனல் இந்நாயனரின் பெண் தம் கூந்தலைப் பெருமானுக்குத் தந்துதவியதன் மூலம் தந்தையின் மறுமைப் பேற்றிற்கு உதவினர் இக்கருத்தில் சேக்கிழார்,

> " இழைக்கும் வினைப்பயன் சூழ்ந்த இப்பிறவிக் கொடுஞ்சூழல்
> பிழைக்கும் நெறி தமக்குதவப் பெண்கொடியைப்
> பெற்றெடுத்தார் "

என்று எடுத்து இயம்புகின்ருர் பெண்ணின் பிறப்பும் தந்தைக்கு ஒருவாற்ருன் உதவ முடியும் என்னும் கருத்தினை இதுவிளக்குகிறது.

வாழ்த்து :

இவ்வண்ணம் அருந்தொண்டாற்றிய நாயனர் அவதரித்த சிறப்பும், வைப்புத் தலமாக இலங்கும் உயர்வும், முனிவரின் காட்சிக்கு நடராசப்பெருமான் தாண்டவம் ஆடியருளிய பெருமையும் உடைய இவ்வூரில் வாழ்வோர் அனைவரும் நாளும் பக்திநலத்தில் சிறந்து இம்மை இன்பமும் மறுமைப்பேறும் பெறுவார்களாக!

இவ்வழிபாட்டில்கலந்துகொண்டுள்ள அன்பர்களும் தொண்டர்களும் எல்லா நலன்களும் பெற்று நீடு இனிது வாழவும் உலகம் பகைமை நீங்கி ஒன்றுபட்டுச் சமயவழி நலம் பெற்றுச் சிறக்கவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

வழிபடுவோம்!
வளம்பெறுவோம்!

அச்சுமாறி வரும் ஆன்மா

டாக்டர் மு. சிவச்சந்திரன், எம். ஏ., பிஎச். டி., பி. எட்.

சிவப்பிரகாசம், உமாபதிசிவாசாரியரால் அருளிச் செய்யப் பெற்ற நூல். இது பதினான்கு சாத்திரங்களில் ஒன்று. இதிலுள்ள 46-ஆம் பாடல் இங்குச் சிந்தனைக்கு உரியதாகிறது. அப்பாடல்:

"இந்நிலையில் ஐந்து சுத்தம்; ஏழ் சுத்தாசுத்தம்
எண்மூன்றும் அசுத்தம் எனும் இவை முப்பத்தாறும்;
மன்னியதத் துவங்களிடை மயங்கிநெடும் துயர்தாம்
மருவும், உருநிலை அழிய வரும்பொழுது வரிவூர்
பன்னகம்அண் டசம்கனவு படர்வகையே முன்னம்
பகரவருங் கலாதிநிலை பரவிய சூக்குமம் ஆம்
தன்உருவில் அணைந்துபயன் அருந்தி அரன்அருளால்
தரையினிடை வரும் என்று சாற்றும் நூலே"

பாடல் பொருள் :

இப்பாடல், 36 தத்துவங்களின் வழியே உயிர் மயங்கித் துன்பத்தைப் பொருந்திப் பின் உடல் நிலைகுலையும் என்றும், அப்பொழுது உயிர் உடலை விட்டுப் பிரியும் என்றும் கூறுகிறது. இப்பிரிவினை மூன்று உவமைகளில் விளக்குகிறது. (1) பாம்பு முன்னைய தோலை விடுத்துப் போதல் போலவும், (2) முட்டையில் தோன்றிய உயிரினங்கள் அம் முட்டையைவிட்டுப் பிரிதல் போலவும், (3) நனவில் கண்டவற்றைக் கனவில் மறந்து அறிவு வேறுபடுதல் போலவும் உயிர் பிரிகிறது என்கிறது. பின் உயிர், கலை முதலிய தத்துவங்களோடு கூடிய நுண்மையான புரியட்டக உடலொடு சென்று, வினைப் பயன்களை நுகர்வதற்குரிய உடம்புகளைப் பொருந்தி மேலுலகு, கீழ் உலகுகளில் நுகரத்தக்க இன்பதுன்பங்களை நுகர்ந்து இறையருளால் இந்நிலவுலகில் மீளவும் வந்து பிறக்கும் என்று கூறுகிறது. இதற்குச் சானருக, ஆகமங்கள் இங்ஙனம் இயம்புகின்றன என்றும் கூறுகின்றது.

இது கூறும் கருத்துக்களை மூன்றாகப் பிரித்துக் காணலாம். (1) 36 தத்துவங்கள், (2) தத்துவங்களில் இருந்து அனுபவித்துப் பின் உயிர் உடலை விட்டுப் பிரியும் நிலை, (3) பிரிந்த நிலையில் உயிர் வினைக்கேற்ப மேலுலகு, கீழ் உலகுகளில் உடல் பெற்று அனுபவித்தல் ஆகியன. இவைபற்றி இனி விரிவாகக் காண்போம்.

36 தத்துவங்கள் :

தத்துவங்கள் 36 ஐயும் மூன்றாகப் பிரிப்பர். (1) ஆன்ம தத்துவம் - 24. (2) வித்தியா தத்துவம் - 7. (3) சிவ தத்துவம் - 5.

ஆன்ம தத்துவம் :

ஆன்ம தத்துவம் பற்றிச் சிந்திப்போம். இவற்றில் புவனம் என்பது உலகம். கண்ணால் காணப்பெறும் உலகம் குறித்துப் பத்துத் தத்துவங்கள் கூறப்பெறுகின்றன. பூதங்கள் ஐந்தும், தன் மாத்திரைகள் ஐந்தும் அவை. நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்பன பூதங்கள். இவற்றின் வடிவம், நிறம், எழுத்து, அடையாளங்கள், தெய்வம், குணம், தொழில் ஆகியனவற்றை விரிவாக உண்மை விளக்கம் 4, 5, 6, 7. 8, 9, பாடல்கள் கூறுகின்றன. இப் பூதங்களின் உள்ளார்ந்த தன்மைகள் தன்மாத்திரைகள் எனப் பெறுகின்றன. அதனால் இவற்றைச் 'சூக்கும பூதம்' என்றும் பூதங்கள் ஐந்தினையும் 'தூல பூதம்' என்றும் கூறுவர். அவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. நீரினிடமாகச் சுவையும், நெருப்பினிடமாக ஒளியும், காற்றினிடமாக ஊறும், வானின் இடமாக ஓசையும், மண்ணின் இடமாக நாற்றமும் அறியப்பெறும். இவை குறித்தும் உண்மைவிளக்கமும் சிவப்பிரகாசமும் விளக்கிக் கூறுகின்றன.

உடம்பு பற்றிய தத்துவங்கள் 10. அவை அறிவுக் கருவிகள் ஐந்தும், தொழில் கருவிகள் ஐந்தும் ஆகும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன அறிவுக் கருவிகள். நாக்கு, கால், கை, எருவாய், கருவாய் என்பன தொழில் கருவிகள்.

அந்தக்கரணங்கள் நான்கு. இவை உட்கருவிகள் எனப்பெறும். அவை சித்தம், மனம், புத்தி, அகங்காரம் என்பன. சித்தம், பழமையானதைப் பதிவு செய்து வைத்திருப்பது; மனம், அதன் வழியில் விரும்புவது ; புத்தி, எங்ஙனம் செய்வது என்று ஆராய்வது ; அகங்காரம், செய்து முடிப்பது என்று துணிவது.

இவையனைத்தும் உயிரின் செயற்பாட்டிற்குப்பயன்படுவனவாய் வருதலின் ஆன்ம தத்துவங்கள் எனப் பெற்றன. இவற்றை அசுத்த தத்துவங்கள் என்றும் கூறுவர். இவை போக்கிய காண்டம் எனப் பெறும். போக்கியம் என்றால் அனுபவிக்க உள்ளவை என்று பொருள்

வித்தியா தத்துவம் :

இனி, வித்தியா தத்துவம் பற்றிச் சிந்திப்போம். காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்பன அவை. காலம் என்பது இன்ன காலம் எனக் காட்டுவது; நியதி என்பது, இந்த இடத்தில் இன்னது நிகழ்வது என்னும் கட்டுப்பாட்டினை உணர்த்துவது; நடுவில் உள்ள மூன்றையும் பிறகு பார்ப்போம்; புருடன் என்பது, உயிரானது இத்தத்துவங்களுக்கு உட்பட்டுச் செயற்படத் தொடருங் காலத்துப் பெறும் நிலையைக் குறிப்பது; மாயை என்பது, இத்தத்துவங்கள் முகிழ்க்க இடம் அளித்திருப்பது. நடுவிலே விடப்பட்ட மூன்றும் இனி ஆழ்ந்து சிந்திக்கத் தக்கன.

ஆன்ம தத்துவத்தில் சித்தம், மனம், புத்தி, அகங்காரம், என்னும் நான்கும் அந்தக்கரணங்கள் எனக் கண்டோம். அவற்றுள் சித்தம், மனம் என்னும் இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர் புடையன. ஆதலின் அவை இரண்டையும் ஒன்றாக்கி எஞ்சிய புத்தி, அகங்காரத்தைக் கூட்டி மூன்றாகக் கொள்ளலாம்.

இம்மூன்றும் உயிர் ஒருசெயலைச் செய்யத் தூண்டிவிடுகின்றன. அங்ஙனமே செயலும் நடந்து முடிந்து விடுகின்றது என்று வைத்துக் கொள்வோம். பின் அச்செயலைக் குறித்து ஆன்மா மறுபரிசிலனை செய்கிறது. 'ஆகா! நாம் இதை இவ்வாறுசெய்திருக்க வேண்டியதில்லை' என்று உயிர் சிந்திக்கிறது. அங்ஙனம் சிந்திக்கும் பொழுது, அதன் செயல் வேகம் குறைகிறது - அவ்வகையில் அகங்காரம் குறைகிறது. ஆராயும் திறம் அதிகரிக்கிறது - அவ் வகையில் புத்தி தெளிவு பெறுகிறது. பின், விரும்பியது தவறு என்று உயிர் உணருகிறது - அவ்வகையில் மனம் தவற்றை உணர்கிறது. இவ்வாறாக உயிரின் அந்தக்கரணங்களையே உயிர் சீர்தூக்கிப் பார்க்கிறது. அந்நிலையில் அவ்வுயிர் எங்கு நின்று இக்காரியத்தைச் செய்கிறது என்னும் கேள்வி எழும். அதற்கு விடையாக - உயிர் நிற்கும் இடங்களாக இருப்பனவே இந்த கலை, அராகம், வித்தை என்பனவாம். அராகத்தில் இருந்து மனத்தையும், வித்தையில் இருந்து புத்தியையும், கலையிலிருந்து அகங்காரத்தையும் உயிர் பார்க்கிறது என்று துணிய வேண்டும்.

உயிர்களுக்குச் சிற்றறிவையும் சிறுதொழில்களையும் விளக்கு தற்குக் கருவிகளாக இவ் ஏழும் நிற்றலின் தூய்மை உடையன வாகவும், நுண் உடம்பின் வழி இன்ப துன்பங்களை உண்டாக்கு வதற்குக் கருவிகளாக நிற்றலின் தூய்மையின்மையனவாகவும்

இவை இருத்தலின் இவற்றைச் சுத்தாசுத்த தத்துவம் என்பர். இவை போக காண்டம் எனப்பெறும். போகம் என்ருல் அனுப விப்பது என்று பொருள்.

சிவ தத்துவம் :

இனி, சிவதத்துவம் பற்றி எண்ணலாம். சிவம், சக்தி, சுத்தவித்தை, ஈசுவரம், சாதாக்கியம் என்பன அவை. சிவம்-அறிவு சக்தி-தொழில். சுத்தவித்தை அறிவு மேம்பட்டுத்தொழில் குறைந்து நிற்றல்; ஈசுவரம் தொழில் மேம்பட்டு அறிவு குறைந்து நிற்றல்; சாதாக்கியம் அறிவும் தொழிலும் ஒத்து இருத்தல். இவை ஐந்தும் மல கன்ம கலப்பின்மையாலும் விருப்பும், வெறுப்பும் அவற்ருன் ஆய துன்பமும் இன்மையாலும் சுத்த தத்துவம் எனப் பெறும். உயிர் களுக்கு உற்ற நுகர்வுகளைச் செலுத்துதற்கு இடனய் நிற்றலின் இதனைப் பிரேரக காண்டம் என்பர். பிரேரக காண்டம் என்ருல் செலுத்தும் இடம் என்பது பொருள்.

இதுவரை 36 தத்துவங்களைப் பற்றிச் சிந்தித்தோம். இவற்றில் சுத்த தத்துவம் ஐந்தும் அறிவுடைய தத்துவம் என்றும், புருட தத்துவம் அறிவும் அறிவின்மையுமுடைய தத்துவம் என்றும், ஏனைய முப்பதும் அறிவற்ற தத்துவம் என்றும் கூறப் பெறும்.

இனி, உயிர், உடலை விட்டுப் பிரியும் நிலை குறித்த மூன்று உவமைகளைச் சிந்திப்போம்.

மூன்று உவமைகள் :

(1) பாம்பு முன்னைய தோலை விடுத்துப் புதிதாக ஒரு தோலைப் பெறும். அது போல உயிர் தன் பருவுடலை விடுத்து நுண் உடலைப் பெறும். (2) முட்டையில் பிறக்கும் உயிரினங்கள் அதனை விடுத்துப் பின் வேறு இடங்களில் வதியும். அதுபோல உயிரும் முன்பிருந்த பருஉடலாகிய இடத்தை விடுத்துக் கீழ் உலகில் பூதவுடலையும் மேலுலகில் பூதசார உடலையும் எடுத்துத் துன்ப இன்பங்களைத் துய்க்கும். (3) நனவில் தெரிந்தது கனவில் தெரிவது இல்லை. அது போல் பருவுடலோடு செய்த செயல்களை நுண்ணுடம்பு எடுக்கும் போது உயிர்கள் அறிவதில்லை.

உடல் மாற்றத்திற்குப் பாம்பையும், இடமாற்றத்திற்கு முட்டை யையும், அறிவு மாற்றத்திற்குக் கனவையும் உவமைகளாகக் கூறினர்.

மூன்று உடல்கள் :

உயிர் எடுக்கும் உடல் வகை மூன்று. (1) இந்நிலவுலகில் எடுக்கும் உடம்பு - அது பூத வுடம்பு எனப்படும். (2) மேலுலகில் சென்று இன்பத்தினை அநுபவிக்கும் உடம்பு - அது பூதசார உடம்பு எனப்படும். (3) கீழ் உலகில் சென்று துன்பத்தினை அநுபவிக்கும் உடம்பு - அது யாதனு உடம்பு எனப்பெறும். இவை மூன்றும் வினைவயத்தால் வரும் உடம்புகளாகும்.

நுண்ணுடம்பு :

வினை வயத்தான் அன்றி, இறைவன், குருடனுக்குக் கோல் கொடுப்பது போல் உயிர்களுக்கு ஓர் உடம்பினைத் தருகின்ருன். அது புரியட்டக உடம்பு என்று கூறப் பெறும். இதனை நுண்ணுடம்பு என்றும், சூக்கும தேகம் என்றும் கூறுவர். இது எட்டின் சேர்க்கையினுல் ஆனது. புரி என்ருல் சரீரம் என்றும் அட்டகம் என்ருல் எட்டு என்றும் பொருள். அந்த எட்டாவன ;- தன்மாத்திரைகள் ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்னும் மூன்றும் ஆகும். இக்கருத்தைத் தான், "கலாதிநிலை பரவிய சூக்குமம்" என்று இப்பாடல்கூறுகிறது. நுண்ணுடம்பு, உயிர், வீடுபெறும் வரை அதனைவிட்டு நீங்காது. ஆதலின்" சூக்குமமாய்த் தன்னுருவில் நின்று" என்று இப்பாடல் கூறுகிறது.

இனி, தான் செய்த வினைகளுக்கு ஏற்ப உயிரானது மேலுலகு, கீழ் உலகுகளில் அனுபவம் பெற்றுவிட்டு மீண்டும் இறையருளால் இம்மண்ணுலகில் வந்து பிறக்கும் என்று இப்பாடல் முடிவாகக் கூறுகிறது. அங்ஙனம் பிறக்கும் பிறப்பின் வகைகளை இந்நூலின் 47 ஆம் பாடல் விரித்துக் கூறுகிறது.

நிறைவுரை :

இவ்வகையில் உயிர்மண்ணுலகிலும் பின்வினைகளுக்கேற்பமேல் உலகிலோ, கீழ் உலகிலோ சென்றடைந்தும் அதன்பின் அடுத்த பிறவியிலும் பிறந்து வருவதை இப்பாடல் விளக்குகிறது. இங்ஙனம், ஆன்மாவானது பல நிலைகளிலும் அச்சு மாறி வருகிறது என்பதனை உணர்தல்வேண்டும்.

போன்விழா ஆண்டை நோக்கி...!

திரு. அரங்க. முத்துமணி

வணக்கப் பாடல்

ஒப்பற்ற சைவம் உரைக்கின்ற தத்துவமாம்
முப்பொருள் உண்மைகளை முன்வைத்துச — செப்புங்கால்
பாசத்தை நீக்கப் பகரும் குருமணிபால்
பாசத்தை வைத்தேன் பணிந்து.

வாழ்த்துக் கவி

உள்ளமோர் கோயிலென்று உரைத்தனர் திருமூ லர்தாம்
வெள்ளமாய் அறிவு நூல்கள் விருந்தெனச் சுவைத்தா லன்றோ
பள்ளத்தில் நீரே பாயும் பான்மையாய் ஞானம் தங்கும்
வெள்ளிமா மலையின் ஈசன் விரும்புவான் இதயம் நோக்கி...

தித்திக்கும் நூல்க ளான திருமுறை மற்றும் நந்தம்
தத்துவச் சமய நூல்கள் சங்கத்துப் பாட லெல்லாம்
எத்தனைக் காலம் நாமும் இசைவுடன் கற்கவேண்டும்
அத்தனைச் செய்தியாவும் அளித்திடும் சுரங்க மாக...

சாற்றுங்கால் நமது ஞான சம்பந்தம் சமயத் திற்கே
ஆற்றிடும் தொண்டை நாளும் அருவிபோல் அனுப வித்தோம்!
போற்றியே வாழ்த்து கின்றோம்! பொன்விழா ஆண்டை நோக்கிக்
காற்றினும் கடிது செல்லக் களிப்புடன் விழைகின் றோமே!

குருமணி யவர்கள், நல்ல குறிஞ்சித்தேன் சுவையைப் போலத்
தருகின்ற கருத்தை யள்ளித் தாங்கிடும் நமது ஏடும்
இருநிலம் போற்ற நாற்பத் தேழினை எய்தக் கண்டோம்
கரும்பினை வெல்லும் ஏடு காலத்தை வென்று வாழ்க!

கட்டுரை எண். 91.

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன் M.A. D., Lit., Ph. D.. D. P. P. A., D, U. N., I, U.
பருத்தியூர்.

**வருந்தா வகை என்மனத் தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக; இனி எனக்குப்
பொருந்தாதொருபொருள்இல்லை;விண் மேவும்புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே!**

அ. விண்மேவும் புலவருக்கு விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியல்

(1) வானத்தில் இருக்கும் தேவர்களுக்குத் திருப்பாற் கடல் அமுதத்தினை நல்விருந்தாகும்படி அளித்த மென்மைத்தன்மையினள் அபிராமி.

(2) தேவர்களைப் புலவர் என்ற சொல்லால் குறித்தார். ''புலவரைப் போற்றுது புத்தேள் உலகு'' என்று திருக்குறளில் தேவர்களைப் புலவர் எனக் குறிப்பிடக் காண்கிறோம். வள்ளுவர் 'சாவா மருந்து' என்பார் அமுதத்தை. இங்குப் பட்டர் 'வேலை மருந்து' என்கிறார். அவ்வமுதத்தினைத் தேவர்களுக்கு நல்விருந்து போல் அளித்தவள் அபிராமிதான் என்கிறார். தேவர்களை வரிசை யாக அமரச்செய்து விருந்துபோல் அமுதளித்த வரலாறு பாகவதம் போன்ற புராணங்களில் வருணிக்கப்பட்டிருக்கிறது.

திருமாலே மோகினியாகி அமுதினை அளித்தார் என்பதும் யாவரும் அறிந்த புராண வரலாறு. பட்டரோ அமுதினை நல்கியது அன்னை என்கிறார்.

(3) ''அரியலால் தேவியில்லை'' என்ற அப்பரின் வாக்குப்படி திருமாலும் தேவியும் வேறல்லர் என்ற நியதிக்கேற்ப அவளே அமுதளித்தாள் என்கிறார்.

'விஷ்ணுரூபினி' என்ற, நாமமும் அவளுக்கு உண்டு. அவ்வாறே 'மோகினி' என்ற நாமமும் 'சம்புமோகினி' என்ற நாமமும் சகஸ்ரநாமத்தில் இடம்பெறுகின்றன. அசுரர்களை மயக்கத் திருமால் மாயையின் வடிவான அம்பிகையினை மனத்தால் பாவித்தார். அதனால் அவர் அம்பிகையாகவே ஆகிவிட்டார் என்றார் சகஸ்ரநாம உரையாசிரியர்.

(4) ''சிவபெருமானும் மயங்கத்தக்க மோகினி வடிவினை, உன்னைப் போற்றி வணங்கியதால் திருமால் பெற்றார்'' என சௌந்தரியலகரி உரைக்கிறது. மோகினி வடிவு அன்னை அருளால் வந்தது. அளித்தவர் திருமால் எனினும் அசுரர்களை மயக்கி அமரர்களுக்கு அமுதளிக்க ஏற்ற உருவமெய்த மூலகாரணமாக இருந்த அவளே நல்கினாள் என்றார்.

(5) ஒன்பது துர்க்கைகளுள் ஆசுரி துர்க்கை என்பவளைப் பற்றி எட்டாவது பாடல் விளக்கத்தில் கண்டோம். அமுதம் அசுரர்களுக்குக் கிட்டக் கூடாது. ஆனால் அவர்களும் கூடி ஆர்ப்பரித்து நிற்கின்றனர். அமுதினை அமரர்களுக்கு மட்டும் அளிக்க வேண்டிய இக்கட்டான நிலை. அப்போது தனது செயல் நிறைவேற வெற்றி கூட்டும் துர்க்கையினைத் தியானித்தார் திருமால். அவளும் அசுரரை மயக்கித் தேவர்களுக்கு மட்டும் அமுதளிக்க ஏற்ற மோகினி வடிவத்தைத் திருமாலுக்கு அளித்தாள். அந்த நிலையில்தான் அவளுக்கு 'ஆசுரிதுர்க்கை' என்று பெயர். அவ்வகையில் அவளே காரணமாய் நின்றதால் அமுதினை நல்கிய மெல்லியல் என்றார்.

(6) திருக்கடவூரில் தேவர்கள் வைத்திருந்த அமுதக்குடம் சிவலிங்கத் திருமேனியாகி அமிர்தகடேஸ்வரர் தோன்றி விட்டார்! பின்பு தேவர்களுக்கு அமுதமேது? அப்போதுதான் தேவி அருள் செய்தாள்! திருக்கடவூரிலுள்ள 'அமிர்தபுஷ்கரணி' என்ற பொய்கையிலிருந்து அமுதினை வரவழைத்து விண்மேவும் புலவருக்கு விருந்தோம்பலில் புகழ்பெற்ற தஞ்சைத் தரணியில் வேலை மருந்தானதை விருந்தாக நல்கி விட்டாள்! இது திருக்கடவூர்த் தல வரலாறு. திருக்கடவூர் வீரட்டானத்தில் கிழக்கு ராஜ கோபுரத்துக்கும் இரண்டாம் சுற்றுக்கும் இடையில் இந்த அமிர்த புஷ்கரணி இருக்கிறது.

திருக்கடவூரில் 'ஆயுஷ்ஹோமம்' நடத்துபவர்களுக்கு ஆயுள் வளர்வதற்கு மேற்கண்ட புஷ்கரணியின் தெய்வத்தன்மையும் ஒரு காரணம்!

ஆ. வருந்தாவகை என் மனத்தாமரையினில் வந்து புகுந்து இருந்தாள் பழைய இருப்பிடமாக.

(1) அடியேன் வருந்தாத வண்ணம் அம்மெல்லியல் எனது மனமாகிய தாமரையில் பழைய இருப்பிடமாக, வந்து புகுந்து இருந்து அருளினள்.

(2) பிறவி முதலான எல்லா வருத்தங்களும் என்னை விட்டகலத் திருவுள்ளம் கொண்டு தானே வலிய வந்து புகுந்து மனத் தாமரையினைப் பழைய இருப்பிடமெனக் கொண்டாள்.

முன்னரே கண்டபடி மாற்சால நியாயத்தால் தானே வந்து அருள்செய்ததை உணர்த்த வந்து இருந்தாள் என்றார். மிகவும் நுண்ணிய மனத் தத்துவத்தில் அணுவுக்கு அணுவான அம்பிகை வலியச் சென்று நுழைந்து இருந்தாள். நம்மை அறியாமலும் நமது முயற்சியின்றியும் பிறர் உட்செல்வதைப் புகுதல் என்று குறிப்பிடுவோம். அவ்வாறுதான் அன்னை புகுந்து இருந்தாள்.

(3) கோள்கள் நமக்கு வருத்தம் தராமல் நல்லனவே செய்ய இறைவன் நமதுள்ளே இருந்து அருளுவதைக் குறிப்பிடும் திருஞான சம்பந்தப் பெருமானின் ''உளமே புகுந்த அதனல்'' என்ற கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

(4) கலைமகள் உணர்த்திய உயர்வான மறைகள் சிந்தையின் ஊடே ''புகுந்து, புகுந்து இருளை அரிகின்றது'' எனத் தமது சரசுவதியந்தாதியில் கம்பர் உரைக்கிறார்.

(5) அண்மையில் அறிமுகமான ஒருவர் தமது உயர்வான பண்பு நலத்தினுல் மிகப் பழகியவரைப் போல நமது இன்ப துன்பங்களில் பங்கேற்கத் தொடங்குவதுண்டு. அதுபோல் அழியாக் குணக் குன்றாகிய அம்பிகை அடியவரது மனத் தாமரையினைப் பழைய இருப்பிடமாகக் கருதி இனிதமர்ந்து விட்டாள்.

இ. இனி எனக்குப் பொருந்தாதொரு பொருள் இல்லை.

(1) இனிமேல் அடியேனுக்குப் பெறலரிதாகும் பொருள் எதுவும் இல்லை.

(2) தானே வந்து புகுந்து இருந்து விட்டதால் அனைத்தும் எய்தலாகும். ''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம், எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை'' என்ற இரண்டே அடிகளில் பெருந்தகை இருந்ததால் அனைத்தும் எய்தும் நலத்தினை சம்பந்தர் உரைத்தார். அவ்வாறே ''பொருந்தா தொருபொருள் இல்லை'' என்றார் பட்டர். சம்பந்தர் "இருந்ததே" என்றார். பட்டர் "இருந்தாள்" என்றார்.

(3) ''பாதாம் புயத்தில் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியும் தந்தருள் பாரதி வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம்புயத்தில் இருப்பாள், இருப்ப என்சிந்தை யுள்ளே
ஏதாம் புவியில் பெறலரிதாவது எனக்கு இனியே? ''

என்ற சுரசுவதியந்தாதியிலும் இதே கருத்தினைக் காண்கிறோம். சிறக்கும் கமலத்திரு மனத்தாமரையினில் வந்து புகுந்து இருந்தாள் என்றார் பட்டர். ''சீதாம் புயத்தில் இருப்பவள் என்சிந்தையுள்ளே இருப்ப'' என்றார் கம்பர். ''இனி எனக்குப் பொருந்தாத தொரு பொருள் இல்லை'' என்றார் பட்டர். கம்பர் "ஏதாம் புவியில் பெறல் அரிதாவதெனக்கு இனியே?'' என்றார்.

இகபர சௌபாக்யம் பெறுதலே இப்பாடலின் பாராயணப் பலன் ஆகும்.

மலத்தினை நீக்கினவர் யார்?

நனவாதி அந்தத்தில் நாடுசுகம் தன்னைக்
கனவாதி அந்தத்தில் கண்டு - நனவாதி
தோற்றிடும் போது அந்தச் சுகரூபம் கண்டவர்கள்
மாற்றிடுவர் என்றும் மலம்.

— சிவபோகசாரம்.

சுத்த சாக்கிர முதலியனவாகக் கூறப்படும் சுத்தாவத்தைகள் ஐந்தன் இறுதிக்கண்ணதாகிய அதிதத்தின் அனுபவிக்கப்படுவ தாகிய பேரின்ப அனுபவத்தினைக் கனவு முதலாகக் கீழ்நோக்கி இறங்கும் கேவலாவத்தைகளின் இறுதிக் கண்ணதாகிய அதீதத் தின் அனுபவிக்கப்படும் அனுபவத்தின் இயல்பிற்ருக அறிந்து, அச்சுத்த சாக்கிர முதலிய சுத்தாவத்தைகள் தோன்றும் காலத்து, அப்பேரின்பத்தினை அனுபவமாக உணர்ந்தவரே எஞ்ஞான்றும் மலத்தை நீக்கினவராவர்.

மேலைநாட்டுத் தத்துவ மேதைகள்
(Western Philosophers)

சுவாமி வீரபாகு

(மலர் 46. இதழ் 12, பக்கம் 632 இன் தொடர்ச்சி ·

2. பிளேட்டோ (Plato) - தொடர்ச்சி (2)

(கி. மு. 427-347)

பிளேட்டோவின் வாழ்க்கைக் குறிப்புக்கள் :

"பிளேட்டோ, உலகம் தோற்றுவித்த மேதா விலாசம் பெற்ற மேன் மக்களில் ஒருவராக விளங்குபவர்" என அவரது வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்களில் ஒருவரான ஆர்தர் கென்யான் ரோகர்ஸ் (Arthur Kenyon Rogers) என்பவர் போற்றுகிருர். ("Plato stands among the supreme men of genius that the world has produced").

பிளேட்டோ, கிருஸ்து பிறப்பதற்கு 427 ஆண்டுகட்கு முன் ஏதென்ஸ் நகரில் பிறந்தவர். பெரியதொரு பிரபுக்கள் வழியில் வந்தவர் பிளேட்டோ-பிரபுவாகவே கடைசிவரை எண்ணத்தால், வாக்கால், செயலால் பிளேட்டோ ஒழுகி நின்ருர். அவரது இளமை வரலாறு அவ்வளவாக நமக்குத் தெரியவில்லை. அவர் பெற்ருேரும் உற்ருேரும் அவர் அரசியலில் ஈடுபட்டு உயர்நிலைக்கு வரவேண்டும் என அவாவினர். என்ருலும் பிளேட்டோ அரசியல் பக்கம் கடைசி வரை ஈடுபடவில்லை. அரசியல் வாழ்க்கை, தம் ஆத்ம சுதந்திரத் தைப் பறித்துவிடும் என்றும், ஏதென்ஸில் விளங்கும் ஜனநாயக அரசியலுக்கு ஏற்பத் தாம் தம் சிந்தனைச் சுதந்திரத்தைத் தியாகம் செய்ய வேண்டிவரும் என்பதாலும் அவர் அரசியல் வாழ்வியலை ஆதரிக்கவில்லை. ஆரம்பத்திலிருந்து பிளேட்டோ ஆன்ம முன்னேற்றம் கருதித் தத்துவ மார்க்கத்திலே பற்றுக்கொண்டு ஈடுபட்டார். பிளேட்டோவும், தமது குருநாதர் சாக்ரட்டீஸ் போல, அரசியல் அல்லலில் தம்மை ஆளாக்கிக் கொள்ளாமல், நடைமுறை வாழ்வில் நாட்டுமக்களின் நலம் கருதி, தம் தத்துவ அறிவைத் துணைக்கொண்டு, தளராத தொண்டில் ஆழ்ந்தார். இவர் வளம்மிக்க வம்சாவளியில் தோன்றியவர் ஆகையால் இளமையில் பல ஆசிரியர் களிடம் கலைகள் பலவும் பயின்ருர். என்ருலும் இவர் மனம் சாக்ரட்

டைனிடமே அதிகம் மதிப்புக்கொண்டது. தம் 20 ஆவது வயது முதல் இவர் சாக்ரட்டீஸ் மறைவுவரை அவர்தம் நிழல்போல நீங்காது அண்டி நின்று அறிவை வளர்த்துக்கொண்டார். சாக்ரட்டீஸ் அன்பர்களின் உள் வட்டத்தில் (inner circle) ஒருவராகவே பிளேட்டோ இறுதிவரை திகழ்ந்தார். சாக்ரட்டீஸ் பிளேட்டோவைத் தலைமாணுக்கராக மட்டும் கருதவில்லை - தம் உற்ற நண்பர்களில் ஒருவராகவும் பிளேட்டோவை நன்கு மதித்து நல்லுறவாடினர் பேரறிஞர் சாக்ரட்டீஸ்.

தத்துவ ஞானி - அரசன் (Philosopher - King) :

பிளேட்டோ, "ஒரு தத்துவ ஞானியே அரசனுகி நாடாளும் பொறுப்பை நடத்த வேண்டும் அல்லது நாடாளும் மன்னன் தத்துவ ஞானத்தில் நாட்டம் கொண்டு அறிந்து, நடைமுறையில் கையாள வேண்டும்" என்ற கோட்பாட்டை வலியுறுத்திவந்தார். அத்தகைய நாட்டின் முதல்வனுக்குத் 'தத்துவஞானி - அரசன்' (Philosopher-King) என்ற நாமம் சூட்டினுர். அரசியலில் இத்தகைய அமைப்பு ஏற்பட வில்லை என்ருல் நாட்டு மக்களின் அல்லலுக்கு என்றும் முடிவில்லை என்றும் அறிவுறுத்தினர். ஒரு தத்துவஞானி - அரசனை எங்ஙனம் உருவாக்கவேண்டும் என்பதைப் பற்றியும் பிளேட்டோ விவரித்துள்ளார். இதனைப்பற்றித் தனியே தக்க தலைப்பில் சிந்திக்கலாம்.

சிராக்யூஸ் நகரில் பிளேட்டோ :

பிளேட்டோ தம் தத்துவஞானி – அரசன் கோட்பாட்டினைப் பற்றி எழுதியும் பேசியும் திருப்தி அடையவில்லை. நடைமுறையில் அதனை அமுல் படுத்தவும் ஆசைப்பட்டார். சீனத் தத்துவஞானி கன்பியூயூஸியஸ் (Confucius) போல நடைமுறைப்படுத்துவதில் நாட்டம் கொண்டார். பிளேட்டோ சிராகயூஸ் (Syracuse) என்ற நாட்டின் அரசனுக இருந்த டயானிஸியஸ் (Dionysius) இவருக்கு அழைப்பு விடுத்துத் தம் நாட்டில் தத்துவஞானி – அரசன் கோட்பாட்டைத் தக்கவாறு நடைமுறைப்படுத்த வேண்டினன். ஆனல் டயானிஸியஸ் வெறும் அரசன் தானே? – தத்துவஞானி அல்ல அல்லவா? – நடைமுறையில் பிளேட்டோவின் தீவிர திட்டத்தைக் கண்டு பீதியுற்ருன் மன்னன் டயானியஸ். இத்தகைய திட்டங்களை ஆதரிக்காமல் பிளேட்டோவுக்கு மரண தண்டனை தருவதாக அச்சுறுத்தினன். பிளேட்டோவின் நண்பர் ஒருவர் தலையிட்டால்உயிர்தப்பினர் என்ருலும் டயானியஸ் பிளேட்டோவை ஓர் அடிமைபோல நடத்திச் சந்தையில் அவரை விற்று விட்டான்.

நல்லவேளையாக பிளேட்டோவை ஓர் அன்பன் தலையிட்டு விலைக்கு வாங்கி விடுதலைப் பெறச் செய்தான். தத்துவஞானி – அரசனை ஆக்கச் சென்ற பிளேட்டோ தத்துவஞானி – அடிமையாகத்தான் ஆனார். பிளேட்டோ மீண்டும் ஏதென்ஸ் வந்து தம் "அகாடெமி" பணியிலே ஈடுபட்டார். இறுதியில் மன்னன் பிளேட்டோவிடம் மன்னிப்புக்கோரி ஒரு லிகிதம வரைந்தான். பிளேட்டோ அது பற்றிப் பொருட்படுத்தவில்லை.

மிக நீண்ட காலம் பிளேட்டோ தம் "அகாடெமியில்" இருந்த வாறு அரும்பெரும் தொண்டாற்றி வந்தார். உலகின் பல பாகங் களிலிருந்தும் மாணவர்கள் வந்து பயின்று மகத்தான அறிவு பெற்று விளங்கினர். மகா அலெக்ஸாண்டருக்கு (Alexander the Great) ஆசானாகி விளங்கிய அரிஸ்டாட்டில் (Aristotle) பிளேட்டோவின் "அகாடெமி" மாணவர்என்றால் இதன்பெருமைக்கு வேறு என்ன சான்று வேண்டும்? மகா அலெக்சாண்டர் தனது தந்தையின் ஆணைப்படி, உலகமெலாம தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவர எத்தனித்தவன். இந்தியாவை நோக்கிக் கங்கைக்கரை வரை படை நடாத்தி வந்தான் எனவரலாறு பேசுகிறது. அவனுக்கு அரிஸ்டாட்டில் ஆசானாய் அமைந்தார் என்பது பெருமைக்கு உரியதாகும்.

பிளேட்டோவின் இறுதிக்காலம் :

பிளேட்டோ, "மண்ணுலகில்வாழும் மகத்தானதோர்இறைவன் (" a mortal Jove ") என்று மக்களால் மதிக்கப் பெற்றார். மாணவர்கள் இவர்பால் மதிப்பு மிகுதியாகக் கொண்டிருந்தனர் – மதித்துப் போற்றினர். அப்பொழுது இவருக்கு வயது எண்பத்து ஒன்று. இவரது மாணவர்களுள் ஒருவன் தனது திருமணத்தில் வந்து கலந்து கொண்டு வாழ்த்திப் பெருமைப்படுத்துமாறு அவரை வேண்டினான். பிளேட்டோ தளர்ந்த நிலையில் இருந்த போதும், தள்ளாடிக் கொண்டு திருமணவீட்டிற்கு வந்து சேர்ந்தார். திருமண வீட்டில் நிகழ்ந்த கேளிக்கைகளிலும் கோலாகலங்களிலும் பிளேட்டோ முற்றுமாய் ஈடுபட முடியவில்லை. ஆரவார அரவம் அவருக்கு அறவே பிடிக்கவில்லை. எனவே ஒரு தனியறைக்குள் சென்று பிளேட்டோ ஓய்வெடுத்துக் கொண்டார். திருமணச் சந்தடியில் எவரும் பிளேட்டோ இருந்த அறைப்பக்கம் திரும்பிப் பார்க்கவேயில்லை – மறந்து விட்டனர். திருமணக் கோலாகலம் நீண்டு கொண்டே போனது. இரவு வெகுநேரம் சென்று மணமகன் மெதுவாக அவ்வறைக்குள்வந்து எட்டிப்பார்த்தான். ஓய்வெடுத்துக் கொண்ட பிளேட்டோ ஓய்வினை நிரந்தரமாக எடுத்துக்கொண்டார். "அகாடெமி" நிறுவி அருந்தொண்டாற்றிய அறிஞர் அமைதி அடைந்தார். கி. மு. 347ல் பிளேட்டோ இறைவனடி சேர்ந்தார்.

பிளேட்டோவின் பிற நூல்கள் :

பிளேட்டோ மொத்தம்29 நூல்கள் எழுதியுள்ளார் என்றும், அந் நூல்கள் யாவும் இன்றும் நமக்குக் கிடைக்கின்றன என்றும் இவர் தம் வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இவர் தம் நூல்களில் மிக மிக முக்கியமானது ''குடியரசு'' (Republic) என்ற நூலாகும். இந்நூலில் பிளேட்டோ தம் மனம் விரும்பும் இலட்சிய அரசினைக் கற்பனை விழிகளால் கண்டு கணித்துச் சித்தரித்துக் காட்டுகிறார். இதுவே சரித்திரத்தில் "முதல் கற்பனை நாடு" - யுடோபியா (Utopia) என்று பாராட்டப் பெறுவதாகும். பிளேட்டோவின் "குடியரசு" பற்றிப் பின்னர்த் தனிக் கட்டுரையில் விரிவாகக் காணலாம்.

பிளேட்டோவின் குறிப்பிடத்தக்க பிற நூல்களாவன: ஃபேடோ (Phaedo), சட்டங்கள் (Laws), தியேட்டிடஸ் (Theaetetus), சிம்போசியம் (Symposium), புரோட்டோகோரஸ் (Protogoras), கார்ஜியஸ் (Gorgias), ஃபேட்ரஸ் (Phaedrus), யூத்திடிமஸ் (Euthydemus), டைமீயஸ் (Timaeus), அபாலஜி (Apology), கிரீட்டோ (Crito) முதலியனவாகும்.

பிளேட்டோவின் கோட்பாடுகள் பற்றியும், அவர்தம் போதனை கள் பற்றியும், அவர் கொண்ட தத்துவஞானம் பற்றியும் இதர முக்கிய விஷயங்கள் பற்றியும் அடுத்து வரும் இதழ்களில் விரிவாகக் காண்போமாக!

பிளேட்டோவின், கருத்து முதல் கோட்பாடு (Theory of Ideas or Idealism), அழியாநிலைக்கோட்பாடு (Theory of Immortality), பழம் நினைவுகள் கோட்பாடு (Theory of Reminiscence), குடியரசில் (Republic) அமைந்த கற்பனை நகரம் (Utopia) முதலிய பிளேட்டோவின் பெருமைமிக்க சிந்தனைகள் பற்றி ஒன்றன் பின் ஒன்றாக விரிவான முறையில் விளக்கமுறச் சிந்திப்போம்.

ஆதார நூல்கள் :

100 Great Thinkers by Dr. Jay E. Greene
Living Biographies of Great Philosophers by Thomas & Thomas
A History of Western Philosophy by Bertrand Russel.
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom [Stroll
Students' History of Philosophy by Arthur Kenyon Rogers.

(தொடரும்)

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

திருவருட்பாத் திரட்டு

(பொழிப்புரையுடன்)

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,

(மலர் 46, இதழ் 12, பக்கம் 640 இன் தொடர்ச்சி)

விரிதிரைக் கடலில் பரிமுகத் தெரியில்
மேவிய நஞ்சமங் கயின்றாய்
வெண்டலை மாலை கண்கொடு கேட்கும்
வெஞ்சின வரவணி நயந்தாய்
மருவொரு சிறிது மருவிலா வெருக்கும்
மத்தமும் ஆத்தியு மகிழ்ந்தாய்
மதியிலா திருண்ட மனத்தினேன் தன்னை
வஞ்சனென் றிகழுதல் வழக்கோ
துரியமுங் கடந்த சுகபர வொளியே
சூக்கும மாகிய வெளியே
தோற்றமும் அழிவு மாற்றிடு மருந்தே
சூழுமா தவர்க்கொரு விருந்தே
திரிதரு கதிரோன் பரிநிழ லொதுங்கிச்
செல்லவோங் குறுபொழி லிலங்கிச்
சிறந்திடுந் தருமைவளர் சொக்கநாதச்
செல்வமே சிற்சுகோ தயமே. 8

(பொ–ரை) துரியநிலையைக் கடந்து நிற்கும் மேலான இன்ப வொளியே! கண்ணுக்குப் புலனாகா வெளியே! தோற்றம் அழிவு என்றிவற்றை மாற்றவல்ல மருந்தே! உன்னை நினைக்கும் பெரிய தவமுடையவர்களுக்கு என்றும் புதிதாய்த் தோற்றம் தருபவனே! உலகைச் சுற்றித் திரிகின்ற சூரியனின் குதிரைகள் தனது நிழலில் ஒதுங்கிச் செல்லுமாறு ஓங்கிய சோலைகள் விளங்கிச் சிறந்திடும் தருமைவளர் செல்வமே! விரிந்த அலைகளையுடைய கடலில் எழுந்த வடவைத்தீயொத்த நஞ்சினை உண்டாய், வெள்ளியமண்டையோட்டு மாலையினைத்தரித்தாய், கண்ணே செவியென அமையும் சினமுடைப் பாம்பினை விரும்பி அணிந்தாய், சிறிதும் மணமில்லாத எருக்கு

ஊமத்தை ஆத்தி யென்ற மலர்களை மகிழ்ந்தணிந்தாய். (இவை யனைத்தையும் பெற்ற நீ) அறிவிலாது இருண்ட மனமுடையஎன்னை மட்டும் வஞ்சனையுடையவன் என்றிகழ்ந்து தள்ளுதல் வழக்கோ?

(கு-ரை) பரிமுகத்தெரி – வடவைத்தீ. பெண்குதிரை வடிவில் கடலுள் இருக்கும் என்பர். எருக்கு முதலியவை சூடினமை – 'வெள்ளெருக்குங் கரும்பாம்பும் பொன்மத்து மிலைச்சியெம, துள்ளிருக்கும் பெருமான்'–(சிதம்பர செய்-16). கண்கொடு...அரவு - 'கண் கேள்வி கவைநாவின் நிறனுற்ற அரா' - (புறம் 382) கட்செவி என்பதும் அறிந்ததே. மத்தம் – தலைக்குறை. ஆத்தி - 'ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே'-(ஆத்திசூடி) துரியங்கடந்தவன் – 'துரியங்கடந்த பரநாத மூலத்தலத்து முளைத்த முழுமுதலே'– (மீனாட்சி பிள். முத்த-1) வெளியான தன்மை – 'எண்ணில் ஒன்றுமில்லா வெளியே' (அபி. அந் - 16)

மதிப்பில்லாப் பொருளை எல்லாம் மதித்தேற்றாயே! மதியில்லா என்னை மதித்திடலாகாதோ! என்று கேட்பது நயமாயுள்ளது. ' நின் பக்தருக்குள் தரமன்று இவன் என்று தள்ளத் தகாது ' என்று (அபி-அந் - 88) அபிராமிப்பட்டரும் கேட்கிறார்.

மையறு மறிவை யளித்தநீ யதனை
வழுவுறு நெறியினி லீர்த்தே
வாட்டிடுங் கொடிய மனத்தையு மேனே
வகுத்தனை யிக்கொடு மனமோ
ஐயவென் னறிவை யிப்பிர பஞ்ச
வாசையி லாழ்த்திநின் னுண்மை
யறிகிலா தந்தோ துன்பினுக் காளாய்
ஆக்கிய தெந்தவா றுய்வேன்
தையலோர் கூறு கொண்ட சுந்தரமே
சச்சிதா னந்தசிற் பரமே
சம்பந்தர் கரத்தில் துலங்கிடு மணியே
சயம்புவா யிலங்கிய கோவே
செய்ய நன்மணிகள் வானுற வெறியுந்
திரைசெறி சண்ட வாவியுமே
சிறந்திடும் தருமைவளர் சொக்க நாதச்
செல்வமே சிற்சுகோ தயமே. 9

(பொ–ரை) உமாதேவியை உடம்பின் பகுதியிலேயேகொண்ட அழகனே! மேலான உண்மையறிவானந்தமே! குருஞானசம்பந்தர்

திருக்கரத்தில் விளங்கிடும் மணியே! தானகத் தோன்றி விளங்கும் தலைவனே! சிவந்த நல்ல மணிகளை வானில் வீசியெறியும் அலைகளை யுடைய 'சண்டவாவி' சிறந்திடும் தருமையில் வளர் செல்வமே! குற்றமற்ற அறிவை அளித்த நீ அவ்வறிவைத் தவருன வழிகளில் ஈர்த்து வருத்திடும் கொடியஉள்ளத்தினையும் ஏனோ வகுத்துள்ளாய்! ஐயனே! இந்தக் கொடிய மனம் என்னறிவை இப்பிரபஞ்ச ஆசை களில் ஆழ்த்திவிட்டு, நினதுண்மையைத் தெரிந்து கொள்ளாதபடி செய்துவிட்டதே! எந்தவழியில் நானுய்வேன்!

(கு-ரை) பிரபஞ்சம் – உலகம். இன்பு×துன்பு. தையல் – தயவுடையவள்–'அருட்கருணை தானய திருவுள்ளமுடைய தவவல்லி' (பெ. புரா. ஆனய. 38) சயம்பு–சுயம்பு. இயல்பாகவே தோன்றியது.

முக்குண மகற்றி மும்மல மகற்றி
மூவகை யவத்தையு மகற்றி
முத்திற விருப்பும் அகற்றிநின் னடியை
முன்னிநின் றுடல்பொரு ளாவி
தக்கவ நினக்கே யடைக்கல மென்னத்
தந்துநின் னிருமல சுகத்தில்
சார்ந்தினி திருக்க வெளியனேற் கருளுந்
தன்மைநின் தகைமைய தன்றே
முக்கணு முதல்வா முப்புர மெரித்த
மூர்த்தியே நீற்றெளி பழுத்த
முண்டகா வெண்டோ ளத்தனே யென்புன்
மொழியுமா தரித்திடு முதலே
திக்குக ளனைத்தும் போற்றும் புண்ணியனே
திருந்திய வென்மனக் கோயில்
சிறந்திடுந் தருமை வளர்சொக்க நாதச்
செல்வமே சிற்சுகோ தயமே. 10

(பொ-ரை) முக்கண்ணுடை முதல்வனே! திரிபுரத்தை அழித்த வனே! திருநீற்றெளி விளங்கும் நெற்றியை உடையாய்! எண் தோளுடைய அத்தனே! எனது புல்லிய மொழிகளையும் ஆதரித் தேற்கும் முதற்பொருளே! திசைகளிலுள்ளோர் எல்லாம் போற்றும் புண்ணியனே! திருத்தமான என்மனக் கோயிற்குள் சிறந்திடும் தருமைவளர் சொக்கநாதச் செல்வமே! இராஜத, சாத்விக, தாமத மென்ற குணங்களை நீக்கி, ஆணவ, கன்ம, மாயைகளை அகற்றி – மண், பெண், பொன்னுசைகளை நீக்கிவிட்டு நினது திருவடியை நெருங்கி நின்று–உடல் பொருள் ஆவிகளைத் தகுதியுடையவனுகிய

உன்னிடத்திலேயே அடைக்கலமெனத் தந்து-நீ தரும் நிர்மலமான சுகத்தை அனுபவித்திருக்க எளியேனுக்கு அருளவேண்டாமோ! இது உன்மேலான தகைமைக்கு இயைந்ததே யன்றோ!

(கு-ரை) முண்டகம் - நெற்றி. சைவ வெண்டிரு நீற்று முண்டகத்தொளி தழைப்பும் (பெரிய. அமர்நீதி-7) என்புன்மொழி- எனது பொலிவற்ற-மிக எளிய சொற்கள். 'மணநாறு நின்தாளிணைக் கன் நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே' - (அபி. அந்-13) என்பது நோக்குக. திருத்தமான என்மனக் கோயிலெனச் சிறந்திடும் தருமைத் திருக்கோயிலில் குடிகொண்டவன்-என மனக் கோயிலை உவமையாகக் கூறவும் இடமுண்டு. 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்' திருநாவு - (5-2-1) கோயில் - இல் ஐந்தாம் வேற்றுமை உருபு ஒப்புப் பொருளில் வந்ததாகக் கூறுக. தவவலிமை யுடையார்க்கே மனம் திருந்திய நிலைமையிலிருக்கும் - என்பதை ஈற்றடி எண்ண வைக்கிறது.

திருவருளாலும் குருவருளாலும்
இப்பொழிப்புரைத் தொடர் நிறைவுபெறுகிறது.
எல்லாம் சிவன் செயல்!

கடிதம்

குத்தாலம் பாலு 12—10—87.
தினமணி நிருபர்

தருமையின் ஞானவேந்தர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்கு, சிரம்தாழ்த்திய பெருவணக்கம். ஆவணித்திங்கள் ஞானசம்பந்தம் இன்றுதான் பார்க்க முடிந்தது. வழக்கம் போல் ஆசியுரையினைத் தொடர்ந்து படிக்கும் அடியேன் 17—8—1987 காரைக்காலில் நிகழ்த்திய ஆசியுரையினைப் படித்த போழ்து மகா சந்நிதானம் அவர்கள் சைவசித்தாந்தத்தைப் பிழிந்து எளியவர் களும் உணரும்படி தேனாக வழங்கிய நிலை போற்றக் கூடியது. ஒவ்வொரு தலைப்புகளும் மிக உயர்ந்த தத்துவக் கருத்துக்களை மிக லாவகமாகப் புரியும்படி ஆசியுரை அமைந்து இருந்ததைப் பல பெரியவர்களிடம் எடுத்துக் கூறிய போழ்து அவர்களும் ஞான சம்பந்தத்தின் நிரந்தர வாசகர்களாக இருந்தமையினால் நான் கூறிய கருத்துக்களை அவர்களும் வழிமொழிந்தார்கள் என்ற போழ்து மிகமிகக் களிப்புற்றேன். எல்லாச் செல்வங்களையும் பெற் றுள்ளதோடு பெரிய அருட்செல்வத்தையும், பேரறிவுச் செல்வத்தை யும் இறையருளால் பெற்றுள்ள மகாசந்நிதானம் அவர்களின் அறுவகைச்சமய விளக்கம் அமுதினும் இனியதாக அமைந்துள்ளது.

செயல்படும் விமரிசனம்

திரு, க. நா. சுப்பிரமண்யம்

பாரதியின் இடம் :

பாரதியாருக்கு வாரிசுகளாக இதுவரை பல கவிகள் தோன்றி விட்டார்கள் - பாரதிதாசன் முதற்கொண்டு, ஆனல் பாரதியார் நிறைவேற்றிய அடிப்படைத் தேவைகளை அவர்களில் ஒருவரும் நிறைவேற்றி வைக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

" ஒரு நல்ல கவிக்குப் பின் நல்ல கவி வேறு ஒருவன் தோன்ற ஓராயிரம் ஆண்டு காலமாவது பிடிக்கும் '' என்பது ஓரளவுக்கு உலகம் முழுவதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வசனம். சுப்பிரமணிய பாரதியாரை இளங்கோவைப் போல, மாணிக்கவாசகரைப் போல, திருவள்ளுவரைப்போல ஒரு 'பெருங்கவி, என்று ஏற்றுக் கொண்டால் அவர் நிழலில் பெருங்கவிகள் ஒருவரும் இந்த எழுபது எண்பது ஆண்டுகளில் தோன்றவில்லை என்பதில் ஆச்சரியம் இல்லைதான்.

ஆங்கிலக் கவிஞர்கள் :

ஆங்கில இலக்கியத்துக்கு ஐந்து நூற்றுண்டு மரபு இருக்கிறது என்று வைத்துக்கொண்டால், பெருங்கவிகள் என்று இரண்டு மூன்று பேரைத்தான் சொல்ல இயலும். சாஸர், ஷேக்ஸ்பியர், டபிள்யூ. பி. யேட்ஸ் என்று வேண்டுமானல் சற்றுத் தாராளமாக இன்னும் இரண்டு மூன்று பேரைச் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆனல் நல்ல கவிகள் என்று இருபது, முப்பது, நாற்பது, என்று பெயர்கள் சொல்லலாம். கிறிஸ்டஃபர் மார்லோ, ஜான்ஸ்டன், டிரெய்டன், வோர்ட்ஸ் வொர்த், கீட்ஸ், ஷெல்லி, டி. எஸ். எலியட் என்று உரைநடையில் இப்படி இல்லை. நல்ல உரைநடைக்காரர்கள் என்று ஐம்பது, அறுபது பேரைச் சொல்லலாம். மிகச்சிறந்த உரை நடைக்காரர்கள் என்று இருபது பேர் வரையில் சொல்லலாம்.

காலகட்டத்தால் :

ஒரேகாலகட்டத்தில்ஐந்தாறு இலக்கியமேதைகள் தோன்றுவது மிகவும் அபூர்வமாகவே நடந்திருக்கிறது. ரஷியாவில் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இரண்டாவது பகுதியில் இருந்த அளவு எண்ணிக்கையில் மேதைகள் வேறு ஒரு சமுதாயத்திலும் தோன்றியதில்லை. இத்தாலியில் மறுமலர்ச்சிக் காலத்தில் கலைஞர்கள் (சித்திர சிற்ப, தங்கக் கலைஞர்கள்) தோன்றிய அளவுக்கு இலக்கியமேதைகள் ரஷியாவில் தோன்றினுர்கள். இரண்டு கால கட்டத்துக்கும் பொதுவானவிஷயம், அந்தச் சமுதாயம் மிகவும் தீவிரமானகொடுங் கோலாட்சிக்கு உட்பட்டிருந்தது என்பதுதான். இதனுல் கொடுங் கோல், கலை, இலக்கிய உற்பத்திக்குச் சாதகமானது என்றும் சொல்ல இயலவில்லை.

சாகித்ய அகாதெமியின் தொகுப்பு நூல்கள் :

சாகித்திய அகாதெமி சார்பில் வெளியாகியிருக்கிற இரு தொகுப்பு நூல்களையும் பார்த்தால் - இரண்டும் பழைய, சமீப காலத்திய நவீன மொழி இலக்கியங்களைப் பற்றி இன்றைய பேராசிரியர்கள் - அவர்களை விமரிசகர்கள் என்று சொல்லுவது பொருந்தாது-எழுதிய இலக்கிய சரித்திரக் கட்டுரைத் தொகுப்புகள் கிட்டத்தட்ட இரண்டாயிரம் மூவாயிரம் இலக்கியாசிரியர்கள் பெயர்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு முக்கிய இலக்கிய மொழியிலுமே நூறு, இருநூறு, முந்நூறு என்றுபெயர்கள் உதிர்க்கப் பட்டிருக்கின்றன. இத்தனைப்பேர் இலக்கியத்தில் பெயர் சொல்லக் கூடியவர்கள் என்று ஒரு நூறு அல்லது நூற்றைம்பது ஆண்டுகளில் ஒரு சமுதாயம் உருவாக்கித் தந்து விட்டால் அந்தச் சமுதாயத்தை மகோன்னதமான சாதனை காட்டிய சமுதாயம் என்று சொல்ல வேண்டும். ஐரோப்பிய இலக்கியத்தில் ஒரு ஐந்நூறு வருஷத்தில் முக்கியமான, உலகம் முழுவதும் படிக்கவேண்டிய இலக்கியாசிரியர்கள் என்று பொருத்திஞல் இருநூறு முந்நூறு தேறலாம். இந்தியா அளவுக்கு மொழிகள் பல, ஐரோப்பாவிலும் இருக்கின்றன.

விமர்சகனின் முயற்சி :

அச்சு இயந்திர சாதனம் காரணமாக இலக்கியமல்லாத பலவும் நூல்களாக உருப்பெற்றுவிடுகின்றன. அரசியல் மற்றும் பத்திரிகைத் துறை போக, இலக்கிய ஸ்தாபனங்கள்மூலம்பலரும் முக்கியத்துவம் பெற்றுவிடுகிருர்கள். 1987 இல் சாகித்திய அகாதெமி தொகுப்புகள் இரண்டிலும் இடம் பெற்று முக்கியமானவர்களாக இன்று கருதப்

படுகிற இரண்டாயிரம் மூவாயிரம் இலக்கியாசிரியர்களில் முந்நூறு பேர்வழிகளின் பெயர்கள் 2087இல் நிலைத்திருக்கும் என்று சொல்ல முடியாது. முப்பது பேர் நிலைத்திருக்கலாமோ என்னவோ? இந்த முப்பது பேர் யார் யாராக இருக்கும் என்று அறிந்து கொள்வது தான் இலக்கிய விமரிசகனின் முயற்சியாகும். ஒன்றிரண்டு பேர் களைச் சேர்ப்பதிலும் விடுவதிலும் தவறு நேரலாம் தான். ஆனால் அதற்காக இன்று விமரிசகன் செயல்படக்கூடாது என்று சொல்வது தவறு. காலத்தின் நிர்தாட்சண்யத்தை எட்ட விமரிசகன் முயற்சி செய்வதற்கு வாசகர்களும் உதவுகிறார்கள் - இலக்கியத்தில் சிரத்தையுள்ள இலக்கியாசிரியர்களும் முயல்கிறார்கள். இது அவசியமான ஒரு விமரிசன முயற்சி - போக்கு. ஆதரிக்க வேண்டிய அவசியம் உண்டு.

இலக்கியப் பார்வையும் இலட்சியமும் :

மிகச் சிறப்பானசாம்ராஜ்யவாதியும்,பிரிட்டிஷ்'ஜிங்கோயிஸ்டு' மான ருட்யார்ட் கிப்லிங் சொன்னான்: "ஆங்கிலம் மட்டும் தெரிந்த வனுக்கு ஆங்கிலத்தைப் பற்றி என்ன தெரியும்?" என்று. மாற்றி, தமிழ் ஜிங்கோக்களில்பலரும் "தமிழ் மட்டும் தெரிந்தால்போதும்" என்று கிணற்றுத் தவளை வாழ்வை லட்சிய வாழ்வாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதை மறுத்துக் கூற, தமிழர்களாகிய நமக்கு அரசியல் காரணங்களினால், தைரியமில்லாமல் இருக்கிறது. மொழியின் பயனும் போக்கும் அரசியல் பார்வையில் வேறு இலக்கியப் பார்வையில் வேறு என்பதே நம்மில் பலருக்கும் தெரிவ தில்லை. அரசியல் பார்வை தற்காலிகயானது என்பது மட்டுமல்ல; காலத்துக்குக் காலம், கட்சிக்குக் கட்சி மாறக்கூடியது. இலக்கியப் பார்வை அப்படியல்ல.காலத்துக்குக் காலம், பார்வைக்குப்பார்வை வேறுபாடுகள் உண்டென்றாலும், இலக்கியப் பார்வை மொழியின் பயனையும் போக்கையும் ஒட்டுமொத்தமாக மனத்தில்கொண்டது. மரபு உடைத்து மரபு சேர்க்கும் விந்தையை மனத்தில் கொண்டது. இலக்கியத்தின் முதல் "உபஉபயோகம்" – இலக்கியத்துக்கு உப யோகம் என்று ஒன்று கற்பிக்க வேண்டுமானால் – அது மொழியைப் பரிசுத்தமாக வைத்திருக்கிறது என்பதுதான். எந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று தீர்மானித்துச் செயல்படுவதே இலக்கியம். இரட்டை அர்த்தங்கள் எதிர்பாராத அர்த்தங்களாக இருக்கக் கூடாது. பரிசுத்தமான தமிழ் - மொழியென்றால் தூய தமிழ் அல்ல. தமிழர்கள் வாழ்வில், நாவில் நடம்புரிகிற தமிழ். அகராதியைத் தேடிக்கொண்டு போகலாம் – அது உ. வே. சாமிநாதையரின் அரும்பத அகராதியாக இருக்கலாமே தவிர, சிதம்பரநாதரின் 'டமில் டிக்ஷனரியாக'யாக இருக்கக்கூடாது.

இலக்கியத்தின் இரண்டாவது லட்சியம், தன் மொழியைப் பேசுகிறவர்களின் வாழ்வில், அவர்கள் தினப்படிக் காரியங்களிலே குறுக்கிடாமல் கூட வருவதுதான். இந்த உபயோகம் தமிழைப் பற்றிய வரையில் சரித்திர ரீதியில் இல்லாமலே போய்விட்டது. குறளைச் சமயத்திலும், சமயமில்லாமலும் சொல்லுகிற பிரசங்கிகள் பலர் 'யார் யார் வாய்க்கேட்பினும்' என்று சொல்லிக் கொண்டே ஒருவரும் சொல்வதைக் கேட்காதவர்கள்தான். 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்றுசொல்லிக்கொண்டே அன்பையே வெளியே தள்ளிக் கதவைச் சாத்தித் தாளிட்டு விடுகிறவர்கள்தான். மனிதர்களே போல இருக்கிறார்களே இந்த மனிதர்களல்லாதவர்களும் என்று சொல்லிக்கொண்டே மனிதர்களேயல்லாதவர்களாக இருக்க முனைபவர்கள்தான்.

டாண்டேவும் இளங்கோவும் :

டாண்டேயின் Divine Comedy என்கிற காவியத்தைப் படித்திருப்பவர்களுக்கு, இளங்கோவின் சிலப்பதிகாரம் அதைவிடச் சற்றும் தரத்தில் குறைந்ததல்ல என்று தெரிந்திருக்க வேண்டும். மதச்சார்பான அறிவு, தருமநெறியை ஏற்றுக்கொண்டகாவியங்கள் இரண்டுமே! ஒன்று சமண மதம், மற்றது கிறிஸ்துவ மதம். கவிகளாக இருவருமே தாங்கள் விரும்பியதைப் பூரணமான பிரக்ஞையுடன் தெரிந்து கவிதை செய்கிறார்கள். இதை ஒப்பிட்டுப் பார்த்து, சிலப்பதிகாரத்தை டாண்டேயின் காவியத்துடன் சரிநிகர் சமானமாக உலக இலக்கியத்தில் நிற்க வழிவகைகள் சொல்லாமல் தமிழ் விமரிசகர்கள் இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் தமிழ்ச் சமுதாயம் விமரிசகர்களைச் செயல்படாமல் வைத்திருக்கிறது என்பதுதான். இந்த நிலைமைக்கு யார் காரணம் என்றால் தமிழன்பர்கள் என்று சொல்லிக் கொண்டு நம்மிடையே முக்கியமான ஸ்தானங்களில் பதவி வகிப்பவர்கள்தான்!

—நன்றி :- தினமணி

கமலை ஞானப்பிரகாசர் மெய்த்தொண்டர்கள்

ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கைஎல்லாம் கல்விகேள்வியல்லல்
ஒய்வார் சிவானந்த வாரியுள்ளே ஒன்றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர காசன்மெய்த்
[தொண்டர்களே!

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்.

வைச்வதேவம்

" வித்தியாவாசஸ்பதி "
பிர்மஸ்ரீ. P. இராமநாத ஐயர்

புலால் மறுத்துக் காய்கறிகளையே உண்பவர்க்கும் ஐவகை ஹிம்சைகளால் பாபம் சம்பவிக்கிறது. இதற்குப் பிராயச்சித்தமாக "வைச்வ தேவம்" என்ற ஒரு கர்மா (சடங்கு) விதிக்கப்பட்டுள்ளது. ஐவகை ஹிம்சைகள் உண்டாகும் இடங்கள் :-

1. கண்டனீ: (Khandanee) அரிவாள்மணை, உரல் முதலியவைகள். இவைகளில் காய்கறிகள் தானியங்கள் துண்டிக்கப்படுகின்றன.

2. பேஷணீ: (Peshanee) ஆட்டுக்கல், அம்மி போன்றவை. இங்கே அறைக்கப்படுகின்றன.

3. சுல்லீ: (Chullee) அடுப்பு. இங்கே எரிக்கப்படுகின்றது.

4. ஜலகும்பம்: (Jalakumbham) நீர் தேக்கி வைக்கும் பெரிய பாத்திரம் அல்லது தொட்டி. எறும்பு, கொசு போன்ற ஜந்துக்கள் இவைகளில் மடிகின்றன.

5. உபஸ்கரம்: (Upaskaram) முறம், வார்கோல் போன்றவை. புடைக்கும் போதும், சுத்தம் செய்யும் போதும் பல உயிரினங்கள் மடிகின்றன.

இவ்விதம் இல்லறத்தில் பிரதி தினமும் ஜீவராசிகளுக்கு ஹிம்சை ஏற்படுவதால் அதைப் போக்க இருவேளையும் சாப்பிடுவதற்கு முன்னதாக இந்த வைச்வ தேவம் என்ற சடங்கைச் செய்ய வேண்டும்.

இந்தச் சடங்கில் "விச்வ தேவர்கள்" என்ற குறிப்பிட்ட தேவர்களுக்குப் பலிபோடப்படுவதால் இதற்கு வைச்வதேவம் என்று பெயர். இந்ததேவர்களின் எண்ணிக்கை பத்து. இவர்கள் இறந்தவர்

களுக்கு நல்லகதி அளிப்பவர்கள். நம் முன்னோர்களுக்கு நாம் செய்யும் சிராத்தத்திலும் இவர்களுக்கு இலைபோட்டு ஆரா்திப்பது வழக்கமாக இருக்கிறது.

ஆகையால் நாம் உணவு உட்கொள்வது தொடர்பாக ஏற்படும் ஹிம்சையால் உயிரிழந்ததாவரங்கள், மற்ற ஜீவன்களுக்கு நல்லகதி கிடைப்பதாக இந்தச் சடங்கு அமைகிறது.

இதில் 'பிரஜாபதி' தேவதையைக் குறித்து ஒரு ஹோமம். இது தவிரப் பல தேவர்களுக்கும், பித்ருக்களுக்கும், செடி கொடிகளுக்கும், ஜீவராசிகளுக்கும் பலி (நெல்லிக்காய் அளவு உள்ள சாதம்) போடப்படுகிறது. இந்த ஹிம்சை ஏற்படும் இடங்களான அடுப்பு, அதைச் சார்ந்த இடம், குப்பை குவித்த இடம், தண்ணீர்த் தொட்டி இருக்கும் இவைகளில் எல்லாம் பலி போடப்படுகிறது. இந்தச் சடங்கு ஆரம்பமாகும் போது ''உணவு சாப்பிடும் வாயிலாக நான்கு ஐந்து விதமான ஹிம்சையைச் செய்கிறேன். அதற்குப் பிராயச்சித்தமாகவும் இந்த உணவின் பரிசுத்தத் தன்மைக்காகவும் இந்தச் சடங்கைச் செய்கிறேன்'' என்று சங்கல்பம்.

இஸ்லாம் மதத்திலும் ஆடு முதலிய ஜீவராசிகளை உணவிற்காக இம்சிக்கும் போது இதே கருத்தில் பாத்தியா ஓதி அவ்வுயிர்கட்கு நற்கதி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து அப்புலாலை உண்கிறார்கள். இது முறையாக உள்ள இஸ்லாமியர்கள் இன்றும் கடைப்பிடித்து வருகிறார்கள்.

பஞ்ச ஸூநா க்ருஹஸ்தஸ்ய வர்த்தந்தே அஹரஹ : ஸதா I
கண்டனீ பேஷணீ சுல்லி ஜலகும்ப உபஸ்கர : II

எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணி யிரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே. — தாயுமானர்.

ஏயர்கோன் கலிக்காமர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 1—11—87 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

"இன்று நல்லறிவு பெறும் இன்பத் திருநாள்" – மனம் இப்படி அடியேனை உந்துகிறது. திருமடம் நோக்கிச் செல்கிறேன். மணி காலை 9-40; 10-00 மணிக்கு அருளுபதேசம் தொடங்கிவிடும். விரைவாகச் செல்லும் அடியேனைத் திருமடத்து வாயிலின் இருபுறமும் அமைந்த வண்ண ஓவியங்கள் நிறுத்துகின்றன. மடத்தின் உள்ளே செல்வோர்க்கு வலப்புறத்தில் அமைந்த திண்ணையில் விளங்கும் ஓவியம் கருத்தை ஈர்க்கும் தத்துவச் செறிவுள்ளது. சைலபுத்ரி, பிரும்மசாரிணி, கூச்மாண்டா, காத்யாயினி, காளராத்திரி, மகாகௌரி என்ற சக்திகளுடன் அருள்வழங்கும் ஸ்கந்தமாதாவின் அருளுருவம் நம்மைச் சிலிர்க்க வைக்கிறது. வாளேந்தி, சிம்மத்தின் மீதமர்ந்த அன்னையைத் தொழுது திருமடத்தின் உள்ளே செல்கிறேன்!

குருமணிகள் சித்ராசனத்தில் அமர்ந்தார்கள். அன்பர்கள் பண்டாரக்கட்டிற்குச் சென்றனர். திருவடி பணிந்தனர். திருநீறு பெற்றனர்; அணிந்தனர்; மகிழ்ந்தனர்; அடக்கத்துடன் அமர்ந்தனர். திருமுறை ஓதப் பெற்றது. குருமணிகள் அருளுபதேசம் தொடங்கினார்கள்.

முதலில் மாதச் சிறப்புத் திருநாட்களை அருளி, அவற்றினைப் பற்றிச் சுருக்கமாகத் தத்துவம் அருள்வது வழக்கம். அம்முறையில் நவம்பர் (ஐப்பசி) இராஜராஜன் சதயவிழா, திருமூலர் திருநாள், நெடுமாற நாயனார், இடங்கழி நாயனார், சத்தி நாயனார், சிறப்புலி நாயனார், மூர்க்க நாயனார் குருபூஜைகள் மற்றும் அன்னபிஷேகம், மயிலாடுதுறையில் கடைமுகத் தீர்த்தம், கார்த்திகை மாதம் திருக்கடவூர் முதலிய தலங்களில் 1008 சங்காபிஷேகம் நடைபெறல் முதலிய சிறப்புக்களை அருளினார்கள்.

ஏயர்கோன் கலிக்காமர் புராணத்தில் சேக்கிழார், சுந்தரர் புராணத்தை அருளிச் செய்துள்ள முறையில் ஸ்ரீ சுந்தரர் வரலாற்றை உபதேசித்தார்கள். சுந்தரர் திருஆரூர்க்கமலாலயத்தில் பொன் பெற்றுப் பரவைபால் அளித்தார்; தாம பிரானை வழிபட்டுத் திரும்பினர்; ஆரூரில் தங்கியிருந்தார் என்பது வரை சென்ற அருளுபதேசத்தில் நிறைவித்தார்கள்.

பொன் பெற்ற சுந்தரர், ஆரூர்ப்பெருமானைப் "பாறுதாங்கிய" எனப்பதிகம் பாடித் துதித்தார். "நமக்கு அடிகள் ஆகிய அடிகளே" என்ற அடைவுகொண்ட இப்பதிகம் இறைவனின் அருட்டன்மைகளை மொழிவது. இறைவனை ஏத்தி ஆரூரில் சிலநாள் தங்கியிருந்தார். பின்னர்த் தலயாத்திரை செய்ய விரும்பினர்; ஆரூர்ப்பெருமானிடம் விடை கொண்டார்; திருநள்ளாறு எய்தினர். "செம்பொன்மேனி" எனத் தொடங்கும் தக்கேசிப் பண்ணமைந்த பதிகம் பாடிப் பரவினர். இறைவன் தம்மைத் தடுத்து ஆட்கொண்ட திருவருள் திறத்தினைக் "கற்பகத்தினை" எனத் தொடங்கும் ஆரும் பாடலில் சுந்தரர் குறித்தருளினர். குருமணிகள்,

"........................வெண்ணெய் நல் லூரில்
அற்புதப் பழ ஆவணம் காட்டி
அடியனுய் எனை ஆளது கொண்ட
நற்பதத்தினை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே"

என்னும் அகச்சான்றினைக்குறிப்பிட்டுஅருளினர்கள். இப்பதிகத்தின் எட்டாம் திருப்பாட்டில் 'அடியேற்கு எளிவந்த தூதனை' என்று சுந்தரர் அருளிச் செய்துள்ளார். 'பரவையார் ஊடலை நீக்கத் தூதாகச் சென்றமையைச் சுந்தரர் இங்ஙனம் குறிப்பிட்டார் என இத்தொடர்க்குப் பொருள் கொள்ளுதலும் உண்டு. சுந்தரர் திருவொற்றியூர் சென்று சங்கிலியாரைத் திருமணம் செய்து கொள்ளும் முன்பே இப்பதிகம் பாடினர் என்பர். இக்குறிப்புத் 'தூதாகச் சென்று ஊடல் நீக்கினர்' என்ற பொருள் கொள்ளத் தடையாகிறது. மேலும் திருவொற்றியூரினின்று மீண்டபின் நள்ளாறு அடைந்து தொழுதமை பற்றிக் குறிப்பு இல்லை. சுந்தரர் பரவையாரைத் திருமணம் செய்து கொள்ளுங்கால் இறைவன் செய்த அருளிப்பாடுகளை மனத்திற்கொண்டு இங்ஙனம் குறித்த தாகப்பொருள்கொள்ளவும் இடமுண்டு. தோழராகவும், தூதராகவும் இறைவன் விளங்கினர் எனக் கொள்ளலாம். இது ஆய்வு செய்து முடிவுகாணற்குரிய பகுதி எனவிளக்கியமை ஆய்வாளர்சிந்தனைக்குப் பெருவிருந்தாய் அமைந்தது.

திருநள்ளாற்றினின்று புறப்பட்டுத் திருக்கடவூர் மயானம் சார்ந்து தொழுது பதிகம் பாடினர். 'மருவார் கொன்றை' எனத் தொடங்கும் பழம் பஞ்சுரப்பண்ணமைந்த பதிகம்அது. பின்னர்க் கடவூர் அணைந்து வீரட்டம் தொழுது பதிகம் பாடினர். ''பொடியார் மேனியனே'' எனத்தொடங்குவது இப்பதிகம். ''என்னமுதே! எனக்கு ஆர்துணை நீயலதே'' என்ற அடைவு கொண்டது. திருக்கடவூர் என்பது ஊரின் பெயர். அங்கு இரண்டு திருக்கோயில்கள். ஒன்று மயானம், மற்றொன்று வீரட்டம். ஓர் ஊரில் இருதிருக்கோயில்கள். 'ஊர் ஒன்று; தலக்கோயில் இரண்டு' என்ற அமைப்பு மனங்கொளத் தக்கது என விளக்கியமையும், மயானம் என்ற திருப்பெயரோடு கச்சி மயானம், நாலூர் மயானம், கடவூர் மயானம் என்பன விளங்குதலையும் குறிப்பிட்டு விளக்கியமையும் மனங்கொள அமைந்து மகிழ்வித்தது.

சுந்தரர் திருவலம்புரம் தொழுதார்; ''எனக்கினித்தினைத் தனைப்புகலிடம் அறிந்தேன்'' எனத் தொடங்கும் பதிகம் பாடினர்; திருச்சாய்க்காடு சார்ந்தார்; இது இயற்பகை நாயனர் அவதாரத் தலம்; துதித்து வழிபட்டுத் திருவெண்காடு நண்ணிப் ''படங்கொள் நாகம்'' எனத் தொடங்கும் பதிகம் பாடிப் பரவினர். இப்பதிகம் இறைவன் தாங்கிய திருக்கோலங்களைப் பற்றி வினவுவதாக வினு அமைப்பில் அமைந்தது. சுந்தரர் இப்பதிகத் திருக்கடைக்காப்பில் 'அடியன் கேட்ட மாலை பத்து' என்று குறிக்கிருர். 'கேட்ட' என்ற சொல் 'வினவாகக் கேட்ட' என்ற பொருள் உடையது; மேலும் அவை அறிவினுக்கள் என விளக்கம் அருளினர்கள். 'தம் பாடல் ஒவ்வொன்றும் ஒருமாலை' என 'மாலைபத்து' என்ற சொல்லால் சுந்தரர் குறிப்பிடுதலைப் புலப்படுத்தியருளி மகிழ்வித்தார்கள்; அங்கிருந்து திருஞானசம்பந்தரின் தாயார் அவதரித்த திருநனிபள்ளி சேர்ந்தார் சுந்தரர். இறைவனைத் தொழுதார். ''ஆதியன் ஆதிரையன்'' எனத் தொடங்கிப் பதிகம் பாடினர். திருச்செம்பொன்பள்ளி முதலிய தலங்களை வணங்கித் திருநின்றியூரை அணைந்தார். ''திருவும் வண்மையும்'' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடிப் பரவினர். இத்திருப்பதிகத்தில் அடியார்கட்கு இறைவன் அருளிச் செய்த மாண்பினை விளக்கியருளினர்.

" இணைகொள் ஏழு எழுநூறு இரும்பனுவல்
ஈன்றவன் திருநாவினுக் கரையன் "

என்று நாவுக்கரசர் 49000 பாடல்களை அருளிச் செய்தார் என்ப தாகச்சுந்தரர் குறிப்பிட்டுள்ளமையை புலப்படுத்தித் தற்போது 100 பதிகங்கள் மட்டுமே கிடைக்கின்றன என்றவிளக்கமும் அருளினர்கள்.

மேலும் இத்தலம் இலக்குமி பூசித்த சிறப்பினது என்று தலச்சிறப்பு அருளினர்கள். சிலநாள் நின்றியூரில் தங்கியிருந்த சுந்தரர் புன்கூர் செல்லுங்கால் நீடூர் நினைவு தோன்றிற்று; அங்குச் சென்று "பரமனைப் பணியா விடலாமே" என்ற முடிவுகொண்ட பதிகம் பாடினர். "ஊர்வதோர் விடை" எனத் தொடங்கும் பதிகம் அது. பின் திருப்புன்கூர் அடைந்தார்.

சுந்தரர் அங்கிருந்து திருக்கோலக்காவை அணுகினர். இறைவன், நகர்ப்புறத்திலேயேவந்து எதிர் நின்று காட்சி தந்தார்; சுந்தரர் விருப்புடன் இறைவன் கழல்தம்மைக் கைதொழுதார். "புற்றில்வாளரவு" எனத் தொடங்கும் பதிகம் பாடினர். "கோலக் காவினில் கண்டு கொண்டேனே" என்ற அடைவு கொண்ட திருப் பதிகம் இது. சுந்தரர் இங்கிருந்து சீகாழி செல்லுங்கால் எல்லையில் பெருமான் காட்சிக் கொடுக்கக் கண்டார். கழுமலத் திருப் பதிகத்தில் 'காதில் வெண்குழையனைக் கடல்கொள மிதந்த கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே' என்று இதனைக் குறித்துள்ளார் எனஒப்பீடு அருளினர்கள். சுந்தரர் கோலக்காவில் பாடியபதிகத்தில் திருஞானசம்பந்தருக்குத் திருப்பொற்றாளம் தந்தருளிய சிறப்பை,

"நாளும்இன் னிசையால் தமிழ்பரப்பும்
ஞானசம் பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்து அவர் பாடலுக்கு இரங்கும்
தன்மையாளனை"

எனக் குறித்துப் போற்றினர். அங்குனின்றும் சீகாழி சார்த்தார். சீகாழி எல்லையில் பெருமான் காட்சி நல்கினர். திருஞானசம்பந்தர் அவதரித்துப் பெருமான் அருள்பெற்ற தலம் ஆதலால் வலம் வந்து நிலமுற வணங்கினர். முத்தமிழ் விரகராம ஞானசம்பந்தர் நற்பதம் நினைந்து தொழுதார்.

திருக்குருகாவூர் அடையச் சென்றார். செல்கையில் சுந்தரர் நீர்வேட்கையும் பசியும் உற்றார் எனபதைப் பெருமான் உணர்ந் தார். வரும்வழியில் பந்தர் அமைத்தார்; மறையவர் வேடத்தில் மறைந்து நின்றார். பொதிசோறும் நீரும் கொண்டு சென்று அளித்தார். அடியார்களும் சுந்தரரும் அருந்தினர்; களைப்பு மேலிட உறங்கினர்; பெருமான் மறைந்தருளினர், தண்ணீர்ப் பந்தலும் மறைத்தது, சுந்தரர் துயில் உணர்ந்தார். பெருமான் அருள்திறம் நினைந்து "இத்தனையாம் ஆற்றை அறிந்திலேன்" எனப் போற்றிப் பதிகம் பாடியவாறே திருக்குருகாவூர் வெள்ளடை சென்று பெருமானைத் தொழுதார். அங்கிருந்து திருக்கழிப்பாலை அடைந் தார்; திருத்தில்லை சார்ந்தார். பொன்னம பலத்து இன்னமுதைத்

தொழுது திருத்தினைநகர் சேர்ந்தார். "நீறு தாங்கிய திருநுதலானை" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். "திருத்தினை நகருட் சிவக்கொழுந்தினைச் சென்றடைமனனே" என்ற அடைவு கொண்டது இப்பதிகம். திருநாவலூர் சார்ந்து "கோவலன் நான்முகன்" எனத் தொடங்கிப் பதிகம் பாடி இறைஞ்சி, இறைவன் தம்மைத் தடுத்தாட்கொண்ட பான்மையைக் குறித்துத் துதி செய்தார். 'நம் திருநாவலூரே' என்ற அடைவுகொண்ட பதிகம் இது. 'நம் திருநின்றியூரே' என்று திருநின்றியூர்ப் பதிகத்திலும் (2 ஆம் பதிகம்) இங்ஙனம் குறிப்பிட்டுள்ளமையை ஒப்பிட்டு விளக்கியமை சிறப்பாக அமைந்தது. அங்கிருந்து திருக்கழுக்குன்றம் சார்ந்து "கொன்று செய்த" என்ற திருப்பதிகம் பாடினார். திருக்கச்சூர் அடைந்தார்.

திருக்கச்சூர் ஆலக்கோயில் அமர்ந்த பெருமானை வணங்கினார்; சுந்தரர் திருவமுது செய்யும் காலம் வந்தது. நாவலூரர் பசியால் வருந்தினார்; பெருமான் வேதியர்வேடம் கொண்டார்; சுந்தரரை அங்கேயே இருக்குமாறு கூறினார்; தாம்திருவோடுதாங்கி அந்தணர் இல்லந்தோறும்சென்று இரந்து சோறுபெற்றுவந்தார். சோறும் கறிகளும் கொணர்ந்து சுந்தரர் முன் இட்டு, அடியாரோடு உணபித்து சுந்தரர் அறியாவாறு மறைந்தார். சுந்தரர் இறைவன் கருணையைப் போற்றி "முதுவாய் ஓரி கதற" என்று தொடங்கிப் பதிகம் பாடினார்.

கச்சூரிலிருந்து புறப்பட்டுப் பல பதிகளையும் தொழுது காஞ்சி சார்ந்தார். திருஏகம்பம் அடைந்து பணிந்தார். பதிகம்பாடினார். அப்பதிகம் கிடைத்திலது. திருக்கச்சி மேற்றளி சார்ந்து "நுந்தா ஒண்சுடரே" என்று தொடங்கிப் பதிகம் பாடினார். ஓணகாந்தன் தளியை அடைந்தார். "நெய்யும் பாலும்" என்ற தொடக்கமுடைய திருப்பதிகம் அருளினார். கச்சி அநேகதங்காவதம் தொழுதார். "தேனெய் புரிந்துழல்" எனத் தொடங்கிப் பதிகம் இசைத்தார். காஞ்சியில் இத்திருக்கோயில்களை வணங்கி மகிழ்ந்து சில நாள் தங்கியிருந்தார். பெருமானிடம் விடைகொண்டு திருவன்பார்த்தான் பனங்காட்டூர் எய்தினார். "விடையின் மேல் வருவானை" என்ற தொடக்கத்ததாகிய திருப்பதிகம் பாடிப் போற்றினார். திருமாற்பேறு, திருவல்லம் தொழுது திருக்காளத்தி சேர்ந்தார்.

திருக்காளத்தித் திருமலை ஏறினார்; கண்ணப்பர்க்கு அருளிய பெருமான் கழலிணைதொழுதார். "செண்டாடும் விடையாய்" என்ற பதிகம் பாடினார். "கண்டார் காதலிக்கும் கணநாதன் எம் காளத்தியாய்!" எனப் பாடி உருகினார். காளத்தியப்பரைக்

கைதொழுது அங்கு இருந்தபடியே வடநாட்டுத் தலங்களாகிய திருப்பருப்பதம், திருக்கேதாரம் முதலிய பதிகளை மானசீகமாக வணங்கினர். "மன்னும் மரையினமும்" எனத் தொடங்கித் திருப் பருப்பதத்தையும் "வாழ்வாவது மாயம்" எனத் தொடங்கித் திருக் கேதாரத்தையும் நினைந்து பாடினர். காளத்தியில் சிலநாள் தங்கிப் பெருமானை வழிபட்டார். பின்னர்ப் பல பதிகளையும் வணங்கிக் கொண்டு பூலோகச் சிவலோகமாகிய திருஒற்றியூர் அடைந்தார். அடியார்கள் மங்கலப்பொருள்களுடன் எதிர்கொண்டுவரவேற்றனர். சுந்தரர் திருக்கோயில் எய்தினர்; கோபுரம் தொழுது உட்சென்றார். "பாட்டும் பாடிப் பரவித் திரிவார்" எனத் தொடங்கிப் பதிகம் பாடித் தொழுதார்.

சுந்தரர் திருஒற்றியூர் சார்ந்தமை வரை அன்று அருளுபதேசம் வழங்கி நிறைவித்தார்கள். அருளுபதேசத்தின்போது ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் இடையிடையே அருளும் விளக்கங்கள் பல! சிலவே இங்குக் குறிக்கப்படுகின்றன. மேற்கோள்கள், பதிகப் பாடல் விளக்கம், உலகியல் எடுத்துக்காட்டுக்கள், சைவசித்தாந்த நெறி கூட்டி உபதேசிக்கும் பாங்கு - ஆகியவை கு மணிகள் தனிச்சிறப்பு!

அருளுபதேசம் நிறைந்தது. பண்டாரக் கட்டிற்கு வெளிப் புறத்தில் இன்கனிச்சாறு அன்பர்கட்கு வழங்கப்பட்டது; பருகி மகிழ்ந்தோம்; பரமன் திருவருள் நினைந்தவாறே இல்லம் ஏகினேம்.

நீல மிடற்றுரை, நின்மலனைத் தோழமைகொள்
கோலத்தார் சீர்அருளும் குருமணிகள் தாள்போற்றி!

வாழ்க குருமணிகள்!

ஆகமங்கள் இருபத்தெட்டு

ஆகமமானது காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற் கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என இருபத்தொட்டாம்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் சிவதலச்சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. பிரபவ - ஐப்பசி - ஆயில்ய நாளாகிய 13—11—87 வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீ உருத்திர பசுபதி நாயனர் அவதரித்தருளியதும் மயிலாடுதுறைக்குத் தெற்கே கொல்லுமாங்குடிக்கு அருகிலுள்ளதும் ஆகிய திருத்தலையூர், ஸ்ரீபாலேசுவரர் திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. விசேஷ, அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. 'திருத்தலையூர்த் தலச் சிறப்பும் உருத்திர பசுபதி நாயனர் வரலாறும்' என்ற நூல் வெளியிடப் பெற்றது. அன்பர்கள் வழிபாட்டிற் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்தைத் தோற்றுவித்தருளிய ஸ்ரீ குருஞானசம்பந்தரின் ஞானசாரியராக விளங்கியவர் கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர். சிறந்த நூலாசிரியரும் ஞானசிரியரும் ஆகிய இவர்கள் முத்திப்பேறு எய்தியநாள் ஐப்பசி தேய்பிறை சஷ்டியாகும். கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் குருபூஜை விழா, பிரபவ – ஐப்பசி - தேய்பிறை சஷ்டி நாளாகிய 11—11—87 புதன்கிழமையன்று காலை திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயிலிலும் திருக்கோயில் திருச்சுற்றில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தீச்சரத்திலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. காலை 10மணியளவில் 'கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் அருள் நூல்கள்' என்ற தலைப்பில், திருமழுவாடிப் புராணம், திருவானைக்காப்புராணம், புட்பவிதி, சிவபூசை அகவல், அனுட்டான அகவல் ஆகிய தலைப்புக்களில் தக்க புலவர்கள் விரிவுரைஆற்றினர். நண்பகல் 1-00மணிக்கு மாகேசுவரபூசை நடைபெற்றது. இரவு திருமுறைக்கலாநிதி திரு. திருஞானசம்பந்த தேசிகர், மற்றும் திருமுறைக்கலாநிதி திரு. கல்யாணசுந்தர தேசிகரின் திருமுறை இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இரவு 8 மணிக்கு ஸ்ரீ தியாகேசருக்கு முசுகுந்தார்ச்சனை நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கியருளினர்கள்.

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆதீனக் குருமுதல்வரின் ஞானாசாரியராகிய கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசரின் குருபூஜை விழாவை ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடத் திருவுளம் பாலித்து இவ்வாண்டு தொடங்கியருளியுள்ளார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் பதினொரும் ஆண்டுக் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து 26½ ஆண்டுகள் அருளாட்சி செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பதினொரும் ஆண்டுக் குருபூஜை விழா 13—11—87 வெள்ளிக்கிழமையன்று குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. காலை, மாலை, இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி, விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள். காலை வழிபாட்டின் பின்னர் 'சைவ சமய அருளாளர்கள்' என்ற தலைப்பில் சொற்பொழிவுகள் நடைபெற்றன. வித்துவான் ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் சொற்பொழிவுகளைத் தொடங்கிவைத்துத் திருஞானசம்பந்தர் பற்றி உரையாற்றினார்கள். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார், தாயுமானார் என்னும் அருளாளர்கள் பற்றி ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆசிரியர்கள் உரையாற்றினர். நண்பகல் மாகேசுவரபூஜை நிகழ்ந்தது. மாலை 6 மணியளவில் தருமை ஆதீனம் தேவார இசை வகுப்பு மாணவ மாணவியரின் திருமுறை நாமாவளி பஜனை நடைபெற்றது. இரவுகுருமூர்த்தவழிபாட்டின்போது, தருமை ஆதீனத் திருக்கூட்டத்து அடியாருள் ஒருவராகிய ஸ்ரீ தமிழாகர முனிவர் இயற்றிய " ஆசௌச தீபிகை " என்ற நூல் வெளியிடப் பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் வழிபாட்டிற் கலந்து கொண்ட பக்தர்கட்கு அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள்.

ஸ்ரீ கயிலைக் குருமணி அறக்கட்டளைச் சார்பில்

ஸ்ரீ காசியில் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி முத்திப்பேறு எய்திய ஸ்ரீ காசி குமாரசுவாமி மடத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் திருவுருவப் படத்திற்குச் சிறப்பு வழிபாடும் ஸ்ரீ விசாலாட்சியம்மை, ஸ்ரீ விசுவநாதர், ஸ்ரீ அன்னபூரணி, ஸ்ரீ கேதாரநாதர் முதலிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நண்பகல் மாகேசுவர பூஜையும் சாதுக்களுக்குப் படைாராவும் சிறப்பாக நடைபெற்றன.

சென்னையில் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் இறுதியாக வழிபாடு ஆற்றிய சென்னை, மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீசுவரர் திருக்கோயிலில் 13—11—87 அன்று நண்பகலில் அபிஷேக ஆராதனைகளும் மாலை ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் நினைவுச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

மயிலாடுதுறையில் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் குருபூஜை விழாவை ஒட்டி மயிலாடுதுறை தெய்வத் தமிழ் மன்றத்தினரால், மயிலாடுதுறை காந்திஜிசாலையிலுள்ள ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் மெட்ரிகுலேஷன் பள்ளியில் நினைவு விழாக் கொண்டாடப்பெற்றது.

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஞானபீடத்து அமர்ந்த திருநாள்

தருமை ஆதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடத்து அமர்ந்த திருநாள். 15—11—87 ஞாயிற்றுக்கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்றுகாலை ஸ்ரீஞானபுரீசுவர சுவாமிக்கு ருத்ராபிஷேகமும் விசேஷ அலங்கார ஆராதனைகளும் நிகழ்த்துவிக்கப் பெற்றன. திருமுறைகள் பூசிக்கப்பெற்றுப் பாராயணம் செய்யப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு திக்பாலவிஜயஸ்நாநசாந்தி ஹோமம் நடைபெற்றது. ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. விழாவிற்கலந்துகொண்ட அன்பர்கட்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அருட்பிரசாதம் வழங்கினார்கள். அன்பர்கள் தரிசனம் செய்து மகிழ்ந்தனர்.

சென்னை, தருமை ஆதீனச் சமயப் பிராசார நிலையம் கடவூர் 1008 சங்காபிஷேகப் பிரசாதம் வழங்கு விழா

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப் பாங்கின்வண்ணம் 23—11—87 திங்கட்கிழமை மாலை திருக்கடவூரில் நிகழ்ந்த 1008 சங்காபிஷேக பிரசாதம் 24—11—87 செவ்வாய் மாலை சென்னை, தருமை ஆதீனச் சமயப் பிரசார நிலைத்தில்வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. திருமுறைப் பாராயணத்தினை அடுத்துத் திரு. எம்.ஆர்.தாமோதரன் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் பேரருட் பெருக்கினைப் போற்றி செய்து வரவேற்புரை வழங்கினார். உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு, எஸ். சுவாமிக் கண்ணு விழாவிற்குத் தலைமை வகித்தார். திருக்கடவூரின் பெருஞ் சிறப்புக்களைத் தக்க மேற்கோள்களுடன் விளக்கி, அபிராமி அந்தாதியின் மாண்பு பற்றிக் குறிப்பிட்டு உரை ஆற்றினார். திரு. எம். கிருஷ்ணன் ஐ. ஏ. எஸ். (ஓய்வு) நன்றி கூறினார். சங்காபிஷேகப் பிரசாதம் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(பிரபவ ஆு மார்கழிமீ 1உ முதல் 30உ முடிய)
(16—12—1987 முதல் 14—1—1988 முடிய)

பிரபவ ஆு மார்கழி மீ 1உ புதவாரம் சித்திரை நக்ஷத்திரம் பவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 19 நாழிகை 46 விநாடிக்கு மேஷ லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுர்ராசி சங்கிரமணமாக, தேவ தின பிராதகாலப்பொழுதாகிய மார்கழிமாதப்பிரவேசம் செய்தருளு கின்றார். அன்று ஷடசிதி புண்ணிய காலம். தனுர்பாத பூஜாரம்பம். தானியாதிபதி புத பகவான் ஆகின்றார். அதனால் பூமியில் அரை பாகத்தில் அற்ப மழையும் தானிய விளைவுக் குறைவும் காணும். ஈஸ்வர கிருபையில் லோகம் உய்யும். எல்லா மாந்தர்களும் இம் மாதம் பூராவும் அருணோதயம் முன்னதாக அதாவது காலை $4\frac{1}{2}$ மணிக்கு முன் துயில் எழுந்து திருக்குளம், சுனை, நதிதீரம் இவற்றில் வசதி உள்ள ஒன்றில் ஸ்நானம் செய்து பரிசுத்தமாகி, தேவாலயம் சென்று உஷத்காலத்தில் இறைவனைத் தரிசித்துவருதல் வேண்டும். அதனால் இலட்சுமி கடாட்சமாக சகல பாக்கியங்களும் ஏற்படும். மடி நீங்கும். நற்சிந்தையில் நற்கிரியைகள் செய்ய ஆற்றல் ஏற்படுவ தாகும். நலம் பல உண்டாகும். இத்தேவ தின பிராத காலமான மார்கழியில் விசேஷமாக உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவபரம்பொருளைப் பூசிக்கின்ற மஹாதவ முனிவர் களாக விளங்குகின்ற சிவஞான குருமஹான்கள், ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானங்கள், ஜெகத்குருமஹான்கள் மக்களுக்குத் தெய்வ சிந்தனை ஏற்படும் பொருட்டு இறைவனின் திருவிளையாடல் மஹத்தத்துவங்களைத் தம் திருவாய் மலர்ந்து அருளுரை செய் தருள்வார்கள். சிவபுண்ணியங்கள் செய்விப்பார்கள். அன்னார் திருவுளப்பாங்கில் தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் இறைவனுக்குச் சிறப்பான உஷத்கால பூசனைகள், ஸ்தலஐதீகத்தில் உற்சவங்கள் இனிது நடந்து வரும். மக்களுக்குத் தெய்வ சிந்தனை ஏற்படும். அனைவரும் நற்கிரியைகள் செய்து உயர்வார்கள்.

குறிப்பு :- ஒருமானிட ஆண்டானது தேவர்களுக்கு ஒருதினம். இதில மார்கழி மாதமானது ஈஸ்வரனுக்குப் பிராத காலமாகும். ஈஸ்வரனுக்கு ஆறுகால அபிஷேகங்கள் நடைபெறுவது முக்கியத்துவமும் புனிதமானதும் ஆகும்.

ஸ்ரீ நடேசர் அபிஷேக வெண்பா

சித்திரையி லோணமுதற சீரானி யுத்திரமாம்
சத்ததனு வாதிரையுஞ் சார்வாகும் - பத்திவளர்
மாசியரி கன்னி மருவு சதுர்த்தசிமன்
றிசாபி ஷேகதின மாம்.

இவ்வாறு சூரியனின் கேந்திரத்தில் சந்திரபகவான் வருகிற தினம் புண்ணிய தினமாகக் கொண்டு முன்னோர்கள் ஈஸ்வரனுக்கு மஹாபிஷேகங்கள் செய்து பக்தி செலுத்தியுள்ளனர். மார்கழியில் திருவாதிரை நக்ஷத்திரமும் சித்திரையில் திருவோண நக்ஷத்திரமும் ஆனியில் உத்திர நக்ஷத்திரமும் மாசி ஆவணி புரட்டாசி மாதங்களில் சதுர்த்தசி திதிகளும் சந்திரன் சூரியனுக்குக் கேந்திரத்தில் வருகிற கால ாகும்.

மற்றும் ஆடிப்பூரம் இது சூரிய சந்திரர்கள் தனது க்ஷேத்திர பரிவர்த்தனையாக உள்ளகாலம்; ஆவணி மூலம் இது சூரியனுக்குத் திரிகோணத்தில் சந்திரன் வருப காலம். ஈஸ்வரன் அபதார தினம் மாத உற்சவங்களில் இறைவன் தீர்த்தவாரி தரிசனம் ஆகிய புண்ணிய காலங்கள் ஈஸ்வரனிடம் பக்தி செலுத்துவதற்கு உகந்த காலமாக முன்னோர்களால் கற்பிக்கப்பட்டு நியமம் வழுவாது திருநாட்கள் அனுஷ்டிக்கப் படுவதாகின்றன.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் வெகுவாக வரும். ஜனவரி முதலில பூமி செந்நெல் பிராப்தியில் நற்பலன் வரும். மந்தஸ்திதியில் இருந்த அனைத்துக் காரியங்களும் நல்ல புஸ்திப்பில் செயல்படுவதாகும். நவீன வாகனம் அல்லது ஒர்பொருள் அனுபோகத்துக்கு வரும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். டிசம்பர் 18, 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். அரசாங்கத் தொடர்புள்ள விஷயங்களில் நன்மைகள் ஏற்பட்டுவரும். கௌர

விக்கப்படுதல் ஆகும். நல்லசெல்வாக்குத்தரும். வாகன சௌகரியம் தரும். எல்லாக் காரியங்களும் வெற்றிகரமாக நடக்கும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் வைதீக நெறியுடன் நடந்துவரும். புத்திரனுக்கு உயர்வுதரும். டிசம்பர் 21, 21 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் வந்து கொண்டிருக்கும். சகோதரர் பந்து மித்திரர்களின் அனுசரணை பலம்தரும். எல்லாக் காரியங்களையும் இஷ்டசித்தியாக நடத்திவரும். செந்நெல் பிராப்தியில் விருத்திபலன் தரும். ஜனவரி முதலில் எழுத்துமூல விஷயங்களில் தஸ்தாவேஜுகளில் நல்ல ஏற்பாடு நடக்கும். ஓர் இயந்திர வாகனம்தரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். டிசம்பர் 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும். பண வருமானம் இராஜ கண்யத்தில் வந்து கொண்டிருக்கும். வித்துவத்தில் நன் மதிப்பும் அரசாங்கத்தில் சிலாக்கிய பலனும்தரும். ஜனவரி முதலில் பிரிந்திருந்த அன்புக்குரியவர் ஒருவர் ஒன்றுகூடுவர். சாஸ்திரோக்தமாகக் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். எல்லாக் காரியங்களும் இஷ்டசித்தியாக நடந்துவரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். டிசம்பர் 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானங்களின் நல்லஸ்திதியை ஏற்படுத்தும். நல்ல பொதுநலப்பான்மையில் மனஉறுதியில் செயல்படுதல் ஆகும். ஜனவரியில் இயந்திர வாகனம் ஒன்று வாங்குதல் ஆகும். ஓர் ஒப்பந்த காரியம் செயல்பட்டுக் கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். ஞாயிற்றுக்கிழமை சூர்யார்ச்சனை செய்ய வயிற்றில் அழற்சி போன்றவை குணமாகும். டிசம்பர் 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் இராஜ கண்யத்தில் கெடியாக வந்து கொண்டிருக்கும்.

மனோபலம் மிகும். பூமியில் இயந்திரங்களில் ஜனவரி முதலில் நற்பலன் வரும். நவீன வாகன பிராப்தியையளிக்கும். சகோதரிக்கு நல்லன ஏற்படும். ஜீவனோபாயம் தொழில்களில் நல்ல ஏற்பாடு செய்விக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். டிசம்பர் 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி -விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும். பணவருமானம் வரும். உண்மை வெளிப்படுத்தலில் சாஸ்திரோக்த நியமங்களில் அந்தஸ்து உயரும். ஜனவரி முதலில் வீடுவாகன பிராப்தியில் நவீனம் பொருந்தும். டெலிவிஷன், அல்லது நூதன இயந்திரம் வாங்குதல் ஆகும். எல்லாக் காரியங்களும் மனோலயப்படி நடந்து கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். டிசம்பர் 31 ஜனவரி 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வெகுவாக வரும். வித்தியா வியாபாராதிகளில், கலைத் துறையில் அரசாங்க அனுகூலங்கள் ஏற்படும். தெய்வ ஸ்தலம் செல்லுதல், நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு, நல்லுரையாடல் மகிழ்ச்சியாகும். பூமி இயந்திரங்களில் ஜனவரி முதலில் நல்லன ஏற்பட்டு வரும். பசுபால் பிராப்தி திருப்தியளிக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஜனவரி 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் வெகுவாக வந்து கொண்டிருக்கும். அதற்கேற்ப அவசிய செலவினங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். விவேகப் பேச்சு, மேடைப் பிரசங்க கீர்த்திதரும். ஜனவரி முதலில் ஓர் நவீன வஸ்துவின், பிராப்தியை யளிக்கும். ஓர் ஒப்பந்த காரியம் தொடங்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். டிசம்பர் 18, 19 இல் கைப்பொருள் நஷ்டம். ஜனவரி 5, 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம் வெள்ளி, சனி சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். அரசாங்க கௌரவம் வைத்தியம்

இவற்றில் செலவும் ஆகும். இயந்திர சாதனத்தில் நற்பலன் தரும். சகோதரர் புத்திரர்களுக்கு நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். மனைவியின் எதிர்காலத்துக்கு ஓர் நிதி முதலீடு செய்யும். எல்லாக் காரியங்களும் சமயோசித புத்தியில் நல்லவிதமாக நடக்கும். டிசம்பர் 21, 22 தேதிகளில் கைப்பொருள் நஷ்டம். ஜனவரி 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும். பண வருமானம் இரண்டு வகையில் வந்துசேரும். படாடோபம் அல்லது குல சம்பிரதாயத்தில் நற்செலவுகளை ஏற்கும். ஓர் நவீன இயந்திர சாதனம் அனுபோகத்துக்கு வரும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். எல்லாக் காரியங்களும் உறுதிப்பாட்டில் செம்மையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும். தாரபுத்திரர்களில் நலம் நன்றாக இருந்துவரும். டிசம்பர் 23, 24 தேதிகளில் கைப்பொருள் நஷ்டம். ஜனவரி 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் சுப பலனாக நடக்கும். பண வருமானம் நல்ல வழியில் வந்து கொண்டிருக்கும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் விசேஷ நற்பலன்களை உண்டு பண்ணும். அரசாங்க உத்தரவுகள் கடிதங்களில் நன்மைகள் ஏற்படடுக் கொண்டிருக்கும். ஓர் நவீன வஸ்து வாங்குதல் ஆகும். எல்லாக் காரியங்களும் இராஜ கண்யத்தில் இஷ்டசித்தியாக நடந்து கொண்டிருக்கும். டிசம்பர் 25, 26 தேதிகள சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபம்.

சைவ ஆகமம் - ஒரு விளக்கம்

ஆகமம் என்பது ஆப்தவாக்கியம். ஆகமங்கள் லௌகிகம், வைதிகம், அத்தியான்மகம், அதிமார்க்கம், மாந்திரம் என ஐவகைப்படும். தற்காலத்தில் பயன்தருவது லௌகிகம்; காலாந்தரத்திற் பயன்தருவது வைதிகம்; ஆத்தும விசாரவியற்கையது அத்தியான்மகம்; யோகவியற்கையது அதிமார்க்கம்; சிவஞான வியற்கையது மாந்திரம் எனப்படும். அவற்றுள், மாந்திரம் பிற நூல்களைப் பூருவ பக்ஷமாகக் கீழ்ப்படுத்தி, மேற்பட்டு விளங்கும் காமிகம் முதலிய சைவாகமங்கள்.

— ஸ்ரீ ஆறுமுகநாவலர் (பெரியபுராண சூசனம்.)

நெஞ்சுவிடு தூது

டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன்

ஆசிரியர் குறிப்பு :

"சித்தாந்த அட்டகம்" என்று கூறப்பெறும் எட்டு நூல்களை அருளியவர் உமாபதி சிவாசாரியர் ஆவர். இவ்வருளாளர் சந்தான குரவருள் நான்காமவராக எண்ணப்படுகின்றார். "தூது" என்ற சிற்றிலக்கிய வகையில் இவரால் அருளப்பட்ட நூல் "நெஞ்சுவிடு தூது" ஆகும்.

யாப்பும் அமைப்பும் :

"கலிவெண்பா" என்ற யாப்பு வகையைச் சேர்ந்தது இந்நூல். "கண்ணி" களாக அமைந்துள்ளது நூல் அமைப்பு. 129 கண்ணிகள் 258 அடிகளை உடையது. தலைவி ஒருத்தி தலைவன்மீது காதல் கொண்டு வருத்தம் மீதூரக் கூறுங் கூற்றாகவும், தன்நெஞ்சைத் தூதுவிட்டு, அத்தலைவன் அணிந்த கொன்றை மாலையை வாங்கி வருமாறு வேண்டுகோள் நிலையாகவும், இதனை அமைத்துள்ளார் ஆசிரியர்.

பதி இயல்பு :

முதற்கண் பதியாகிய சிவபிரான் இயல்புகளைத் தொகுத்துப் பேசுகின்றார்; சைவசித்தாந்த ஞான சாத்திரங்களில் பதிக் கோட்பாடு இங்குத் தொகுத்துரைக்கப் பட்டுள்ளது.

" பூமேவும் உந்திப் புயல் வண்ணன், பொற்பதுமத்
தார்மேவும் மார்பன் சதுமுகத்தோன் — தாம்மேவிப்
பன்றியும் அன்னமுமாய்ப் பாரிடந்தும் வான்பறந்தும்
என்றும் அறியா இயல்பினன் — அன்றியும்
இந்திரனும் வானோரும் ஏனோரும் எப்புவியும்
மந்தர வெற்பும் மறிகடலும் — மந்திரமும்

வேதமும் வேத முடிவின்வினை விந்துவுடன்
நாதமும் காணு நலததினன் — ஒத
அரியரன்; எளியான்; அளவிறந்து நின்ற
பெரியரன்; சிறியான்; பெண் பாகன் — தெரியா
அருவான்; உருவான்; அருவுருவம் அல்லான்;
மரியான்; மரிப்பர் மனத்தான் — பரிவான
மெய்யர்க்கு மெய்யன்; வினைக்கு வினை ஆயினன்;
பொய்யர்க்குப் பொய்யாய பொய்யினன்; — ஐயன்;
படநாகம் பூண்ட பரமன்; பசுவின்
இடமாய் நிறைந்த இறைவன்; — சுடரொளியான்;
என்றும் உளன்'' (நெஞ்சுவிடுதூது - 1- 8)

''திருமாலும் பிரமனும் மண்புகுந்தும், விண்பறந்தும் காணு தற்கு அரியவன்; தேவேந்திரனும், தேவர்களும், பிறரும், மகா மேருவும், சமுத்திராதிபரும், சப்த கோடியாய் விரிந்திருக்கப் பட்ட மந்திர மூர்த்தியரும், நான்கு வேத அதிபரும், அந்தவேதத்திற்குக் காரணமாகிய சுத்த மாயா சத்திகளும், ஓசை வடிவாகிய நாதாதி களும் ஆகிய காரணங்களால் காணப்படாதவன்'' என்பன பௌராணிக நிலையில் விளக்கப்பட்டுள்ளன.

''சொல்லிறந்து நின்றவிடத்துத் தோன்றுதலால் வாக்கிற்கு எட்டாதவன்; எளிய காட்சியான்; தர்க்க நிர்ணயங்களைக் கடந்த பெருமையான்; அணுவிற்கு அணுவாய் நுண்ணியன்; ஆதலால் சிறியான்; இவ்வாறு பெரிதும் சிறிதும் ஆகிய தன்மையை உடையவன் ஆயினும், அடியவர்க்கு வெளிப்பட்டுத் தோன்றும்படித் தன் காருண்ய சக்தியை இடப் பாகத்தில் உடையவன்; வாயுவைப் போலவும், ஆகாயம் போலவும் தோன்றாத அருவமே திருமேனியாக உடையவன்; அன்றியும், அபரவிந்து, அபரநாதம், பரவிந்து, பரநாதமாய் உள்ள நான்கு பேதத் திருமேனியும் ஆனவன்; அசுத்த மாயை, பிரகிருதி மாயைஅதிட்டித்துச் சிருட்டி நடத்தும் மகேசுவரர், உருத்திரர், விட்டுணு, பிரமன் என்று நான்கு வகையில் திருமேனி கொள்கின்றவன்; பேரொளியாய் விளங்கும் திருவுருவத்தையும் உடையவன்; ஆன்மாக்களின் உயிர்க்குயிராய் விளங்குகின்றவன்; எல்லாவற்றிற்கும் மேலானவன்; எல்லாச் சுடர்க்கும் ஒளியை வழங்கும் பெருஞ்சுடர் ஆனவன்'' என்பன தத்துவ நிலையில் விளக்கப்பட்டுள்ளது

சிவபெருமான் அளவினால் அறியப் படாதவன். அருளினால் அறியப்படுபவன் என்ற உண்மை சிவஞான சித்தியாரிலும் அருணந்தி சிவாசாரியரால் விளக்கப்பட்டுள்ளது.

"மறையினால் அயனால் மாலால் மனத்தினால் வாக்கால் மற்றுங்
குறைவிலா அளவி னாலும் கூறொணா தாகி நின்ற, இறைவனார்"

(சிவஞான சித்தியார் - 4)

"அருளினால் ஆகமத்தே அறியலாம் அளவினாலும்
தெருளலாம் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே
மருளெலாம் நீங்கக் கண்டு வாழலாம் பிறவி மாயா
இருளெலாம் இரிக்க லாகும் அடியரோ டிருக்க லாமே"

(மேற்படி நூல் - 5)

ஆன்ம இயல்பு - தனை இயல்பு விளக்கம் :

பதி இயல்பைக் கூறிய இவ்வாசிரியர் அதன்பின் தம் இயல்பைக் கூறத் தொடங்குகின்றார்; அது 'பசு' இயல்பின் விளக்கமாகவும்; பாச இயல்பின் விளக்கமாகவும் அமைகின்றது. "பதி, என்று உள்ளானே அன்றே நானும் உள்ளேன்" என்று தொடங்குகின்றார்; "சீரில் நிலை நில்லாது, திண்டாடும் பல்கருவி, வாரில் அகப்பட்டு மயங்கினேன்" என்று முடிக்கின்றார். "எல்லாப் பிறப்பும் பிறந்தும் இறந்தும் இருவினையின் பொல்லாங்கைத் துய்க்கும் பொதியிலி யேன்" என்று தம்மைத் தாழ்த்திக் கொள்ளும் இவர், 'உலகாயதனைப் பொருந்தும் புல்லறிவைப் பூண்டும் கிடந்தேன்' என்றும் உரைக்கின்றார். 'குடிப்பழியே செய்து கொலை, களவு, காமம் தேடி உழன்று, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு உட்கருவிகளுக்கும் ஆட்பட்டு 'மேனி அயர, அயர, அழிய அழியும், உயிரின் துயரம் உரையேன்' என்று துன்பத்தை விளக்குகின்றார், வயிரம் கொண்ட காமனுக்கும், கோபனுக்கும், மோகனுக்கும்; மத மாற்சரியனுக்கும், இந்திரியம் பத்துக்கும், ஈரைந்து மாத்திரைக்கும், பூதங்கள் ஐந்துக்கும், மூன்று குற்றம், மூன்று குணம், மூன்று மலம், மூன்று அவத்தை, இருவினைக்கும், வாயு ஒரு பத்துக்கும், இச்சை, கிரியை தரித்து, எண்ணிலா அச்சம், கொடுமை பூண்டு, திண்டாடும் பல்கருவிகளாகிய வாரில் அகப்பட்டு வாடினேன் என்று பசுபடும் பாட்டைத் தம்மேலிட்டுக் கொண்டு உரைக்கும் அமைப்பில் பல உருவகங்களையும், கற்பனைகளையும் காண்கின்றோம்.

தத்துவங்களின் வழி ஆன்மா அடையும் துன்பங்களை முறையாக உரைக்கும் இப்பகுதி நினைவு கொள்ளத் தகுந்தது.

நெஞ்சே தூது விடற்குத் தக்கது எனத் தேர்ந்தமை :

'நெஞ்சே தூது விடுவதற்குத் தக்கது' என்று தாம் முடிவு செய்தமைக்குக் காரணத்தைக் கூறி அடுத்த பகுதியை அமைக்கின்றார்.

"உன்னை ஒழிய உறவில்லை என்னுமது
தன்னை அறிவைத் தனியறிவை" (நெஞ்சுவிடு தூது - 23)

என்பது தொடங்கி,

" ஆவிநிலை
நிற்கும் வகை பாராய் நிலையான நெஞ்சமே!
பொற்பினுடன் யானே புகலக்கேள்" (மேற்படி நூல் - 29)

என்பது வரை இப்பகுதி அமைகின்றது.

திருக்குறள் ஆட்சி :

"மயங்கினேன்" என்று முதற்பகுதியை முடித்தவர், திருவள்ளுவர் திருக்குறள் ஒன்றை எடுத்துக்காட்டி அழகு படுத்தியுள்ளார்.

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவ ரென்று — நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள் ளுவர்உரைத்த
மெய்வைத்த சொல்லை விரும்பாமல்"
(மேற்படி நூல் - 24, 25)

"புறப்பற்றாகிய பொருட்பற்றும் அகப்பற்றாகிய இரண்டுடம்பிற் பற்றும் முற்றத் துறந்தவர்களே சிவஞானம் பெற்றவர்கள். இதில் யாதானும் ஒன்றில் சிறிதாயினும் பற்று இருந்ததாயின் அவர்களே பிறப்பு இறப்பு ஆகிய வலையிற்பட்டவர்கள்" என்ற கருத்துடைய குறளை இவ்விடத்து அழகுற ஆண்ட அருமைப்பாடும், திருவள்ளுவர்க்குத் 'தெய்வப் புலமை' என்ற அடைதந்து சிறப்பித்த பாங்கும் அக்குறளை 'மெய்வைத்த சொல்' என்று குறிப்பிட்ட திறனும் உணர்ந்து உணர்ந்து ஓதுதற்கு உரியவை எனலாம்.

"இந்தத் திருக்குறளின் பயனை விரும்பாமல், ஐம்பொறிகட்கும் ஆவதே செய்து பாவமே புரிந்து அப்பாவமெனும் கடற்பரப்பில் அழுந்தி, உண்மை நிலையிலே உணர்ச்சி கொள்ளாமல், நாவால்

கொடுமை உடைய மொழிகள் பல பிதற்றி நிற்கும் நான் இவற்றிலிருந்து விடுபட்டு உய்தற்குரிய வகை எப்படி என்று என் நெஞ்சே! நீ கேட்பாய் ஆயின் சொல்லுவேன் கேள்" என்று கருத்துத் தொடர்ச்சி கொள்ளுமாறு இப்பகுதி அமைதல் கருதத் தக்கது.

தலைவனுக்குரிய தசாங்கம் :

"ஈசன் பெருமை இருவினையேன் உன் றனக்குப், பேசுந்தகைமை யெலாம் பேணிக்கேள்" (மேற்படி நூல் – 39) என்பது வரை அமைந்தது அடுத்த பகுதி எனலாம். இது இந்தத் தூதிற்கு நாயகன் பெருமைகளை விரிவாகப் பேசுவதாக உள்ளது.

தூதுத் தலைவனுக்குரிய தசாங்கங்கள் அடுத்துச் சார்த்திப் பேசப்படும்; அருள்சேர் பண்பால் குணமே குன்று; 'அளவிலாப் பேரின்பம்' அவனுக்கு ஆறு; 'தடையிலா ஞானமே' அவனுக்கு நாடு; 'சிவஞான நிறைவுடைய உள்ளமே' அவனுக்கு ஊர்; அருளே மாலை; இச்சை, ஞானம், கிரியை மூன்றும் அவனுக்குக் குதிரைகள்; ஞானமே ஆனை; (நான்கு மறைகளைக் கொம்பாகவும், இச்சை, ஞானம், கிரியைகளாகிய மூன்று மதங்களையும் உடைய களிறு இது.)

ஆறு சமயங்களையும் கடந்து தனக்கு ஒப்பு இல்லாது ஆருயிர்களின் துன்பச் சுமையை அகற்றி அவை விரும்பிய பேறுகளை அடையச் செய்பவன் தானே எனக் காட்டும் அடையாளமாகிய கொடி உடையவன்.

அருளே முழங்கும் முரசம் அப்பிரானுக்கு; யாண்டும் நீக்கமற நிறைந்து ஒளிக்கும் ஒளியருளும் பேரொளியாய் விளங்கும் இறைவன் திருவருளே கட்டளை ஆகிய ஆணை.

இவ்வாறு தலைவனுக்குரிய தசாங்கங்களாக, மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, குதிரை, ஆனை, கொடி, முரசு, ஆணை ஆகியனபற்றி உரைத்து முடிக்கின்றார்.

குருவின் திருவடி தீட்சை பெற்ற திறம் :

தமக்கு, மறைஞானசம்பந்தராகிய குருநாதரைத் தந்தருளி, அவர்தலைவனாகி நிற்போன்; அவராற் போற்றுந் திருவடிகளை என் தலைமேல் பொறித்தோன் என்று பேசும் பகுதியில், உமாபதி சிவாசாரியரின் குருபக்தி இனிது விளங்குகின்றது; அப்பகுதி வருமாறு :–

" பொறியிலியேன்
வெம்பும் பிறவியலே வீழாமல் விடளித்த
சம்பந்த மாமுனியென் தம்பிரான் — அம்புவியோர்
போற்றும் திருவடிஎன் புன்தலைமேலே பொறித்தோன் "

(மேற்படி நூல் – 83 – 85)

" போற்றும்
குருவேட மாகிக் குணங்குறியொன் றில்லாப்
பெருவேட மாய்நிறைந்த பெம்மான் — கருவேடம்
கட்டுமுருக் கட்டறுத்தான் கற்றவர்வாழ் தில்லையான்
எட்டுமவர்க் கெட்டா இயல்பினன் " (மேற்படி நூல் - 87 – 88)

என்ற பகுதியிலும் "குருவே சிவமாய்" வந்த குறிப்புப் பேசப்படும்.

குருநாதரால் பெற்ற பேறுகள் கூறி மகிழல் :

இத்தகைய தலைவனாகிய அப்பெருமான் வானோர் போற்றத் திருவுலாக் கொண்டபோது கண்டு தாம் வழிபட்டதாகவும், அப்பெருமான் தன்னைப் பார்த்ததாகவும், பழைய வினை, ஐந்து மலத்திரள் அனைத்தையும் பார்த்த அப்பார்வையிலேயே நீக்கி விட்டதாகவும், நினைவு வேறு ஆக்கியதாகவும், உடற் பற்றை நீக்கியதாகவும், கண்ணாறு தேன் அமுதம் காட்டியதாகவும், 'வெண்ணீறு', 'வேடம்', 'பூசை' ஆகிய மூன்றுமே மெய்; 'பொன்', 'வாழ்க்கை', 'மனை' ஆகிய மூன்றுமே பொய் என்று கூறினன் என்பதாகவும், திருவஞ்செழுத்தின் உள்ளீட்டைத் தமக்குத் தெளிவுறுத்தியதாகவும் திருவஞ்செழுத்தை நெஞ்சு அழுத்தி அதனை உச்சரிக்கும் வகையும் உணர்த்தியதாகவும், அதனால் பேரொளி பெருக்கியதாகவும், கள்ளம் மறப்பித்து, மெய்ஞ் ஞானம் ஆக்கி, மனோவிகாரங்களெல்லாம் இறப்பித்ததாகவும், தம் பிறவியை ஈர்த்தழித்ததாகவும் கூறி உருகுகின்றார். (மேற்படி நூல் – 89 - 99) "அத்தகைய அத்தன்பால் சென்று அடையும் இடத்தை நெஞ்சமே செப்பக்கேள்" எனத் தொடங்கிச் செல்லும் இடமும், சென்று சேரா இடமும், சென்று கூறத்தக்க மொழியையும் கூறிக் கொன்றை மாலையை வாங்கி வாராய் என்று முடிக்கின்ற பகுதியே இத்தூது நூலின் இறுதிப் பகுதியாகும். (மேற்படி நூல் 108 – 129.)

சேரா இடங்களைத் தொகுத்துரைத்துச் சேரும் இடம் செப்பல் :

சேரா இடங்களாகச் செப்புவன : (1) அநித்தியமான உடம்பை நித்தியம் எனக் கருதி, மாதர் இணைவிழைச்சில் ஈடுபட்டு,

குற்றமே இயல்பாய்ச் செய்து திரியும் சாருவாகன் அசத்தாகிய காட்சியிற்பட்டு நின்று விடாதே. (2) தானே அகம் பிரமம் என்னும் மாயாவாதிகள் பக்கம் போய்விடாதே. (3) பிறன் ஒருவன் வதைக்கத் தாம் புசிப்பதால் பாவம் இல்லையென்று கொண்டு, வாழும் பௌத்தர் பாவத்துக் கேதுவான சொற்களைப்பற்றித் தடுமாறி விடாதே. (4) இருவகைத் தூய்மையும் இல்லாது, உயிர்க் கொலை தவிர்த்து உடைநீக்கிப் பஞ்சகந்தம் (உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம்) கெட இருப்பது மோட்சம் என்றுரைக்கும் சமணன் பாழிக்குச் சென்று விடாதே. (5) வேதம் ஓதி அதன் பயன் அறியா வேதியராகிய வைதிகர் கூறும் சொல்லை மெய்யென்று கருதி விடாதே. (6) திருநீறும், சிவாலயமும், உள்ளத்துச் சினந்து நீக்கிய நீசர்பால் செல்லாதே. (7) வேடம், பூசை, அருள், மெய்ஞ்ஞானம் இல்லாத மூடராகிய புறச்சமயத்தார் பக்கம் போகாதே. (8) அரனைப் பழித்துத் திரிபவரைப் பாராதே என்றுரைத்து எந்தைபிரான் சம்பந்தமாமுனிவன் வீற்றிருக்கும் திருவோலக்கம் எய்திப் போற்றுவாயாக என்றருளும் பகுதி இனியது.

தூதுச் செய்தி :

''யானையை உரித்தவனே! நின் பவனி கண்டு பக்தி செலுத்தியோர் காமவேள் கணைப்படுவாரோ? நில்லாத செல்வம் நிலை என்று கருதிப் பொல்லா நரகம் புகுவாரோ? பல்வேறு சமயக் கணக்கிற் படுவரோ? சித்தம் பலகால் திகைப்பரோ? பெண்டிர் இன்பம் மருவி மயங்குவரோ? இருபொழுது, இருபத்தேழு விண்மீன், நவக்கிரகம் ஆகியவை தீமை பயக்கும் என்று கொள்வரோ? நின்னைக் கண்ட தலைவியின் வருத்தமெல்லாம் தீர்த்து அருள வேண்டும்'' என்று ஓலக்கத்தில் எய்தி அடி வீழ்ந்து இறைஞ்சிப் ''போற்றி சயசய போற்றி'' என்று கூறுக எனத் தூதுச் செய்தியைக் குறிக்கின்றார்.

நிறைவு வெண்பா :

தூது முடிவில் உள்ள வெண்பா பின்வருமாறு :-

" வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த
சம்பந்த மாமுனிவன் தார்வாங்கி — அம்புந்தும்
வஞ்சமே வும்விழியார் வல்வினையெல் லாம்அகல
நெஞ்சமே வாராய் நினைந்து. "

இத்தூது நூலின் தலைவன், தூதுவிடும் நெஞ்சம், தூதுசென்று வாங்கி வரவேண்டிய பொருள் ஆகியவற்றைச் சுருக்கமாகக் கூறி நிறைகின்றது திருவெண்பா.

வினுக்கள்

1. நெஞ்சு விடுதூது - நூற்குறிப்பும் யாப்பமைப்பும் பற்றிக் குறிப்பிடுக.

2. நெஞ்சு விடுதூது பௌராணிக நிலையிலும் தத்துவநிலையிலும் விளக்கும் பதி இயல்புகளைத் தொகுத்தெழுதுக.

3. தத்துவங்களின்வழி ஆன்மா அடையும் துன்பங்கள் பற்றி நெஞ்சு விடுதூது விளக்கும் பான்மை பற்றிக் குறிப்பிடுக.

4. நெஞ்சே தூது விடற்கு உரியது என ஆசிரியர் தேர்தற்குக் காரணங்கள் யாவை?

5. கருத்துத் தொடர்ச்சியமைய உமாபதிசிவம் திருக்குறளைத் தம் நூலில் ஆண்டுள்ளமைக்குச் சான்று தருக.

6. தலைவனுக்கு உரிய தசாங்கங்களாகக் குறிக்கப் பெற்றன யாவை?

7. குருநாதரால் தாம் பெற்ற பேறுகளாக உமாபதிசிவம் குறிப்பன யாவை?

8. சேரா இடங்களும் சேர வேண்டிய இடமுமாக நெஞ்சுக்குக் கூறிய பகுதியை விளக்குக.

9. உமாபதிசிவம் என்னும் தலைவி கூறியனுப்பிய தூதுச்செய்தி யாது?

10. நெஞ்சு விடுதூது நூலின் நிறைவில் அமைந்த திருவெண்பாவின் சிறப்புக்களைச் சுட்டுக.

மார்கழி மாதச் சிறப்பு நாட்கள்

16—12—87	புதன், ஷடசீதி புண்ணியகாலம். திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம். சாபரவி 19-46. தனுர்மாத பூஜாரம்பம்.
18—12—87	வெள்ளி, பிரதோஷம்.
19—12—87	சனி, மாத சிவராத்திரி.
20—12—87	ஞாயிறு, சர்வ அமாவாசை. அனுமத் ஜயந்தி.
22—12—87	செவ்வாய், ஸ்ரீ சாக்கிய நாயனார் குருபூஜை.
26—12—87	சனி, வியதீபாதம். வேளூர், திருவையாறு, திருப்பனந்தாள், திருக்கடவூர், சீகாழி, சிதம்பரம், உத்தரகோசமங்கை முதலிய தலங்களில் திருவெம்பாவை உற்சவம் ஆரம்பம்.
28—12—87	திங்கள், ஸ்ரீ வாயிலார் நாயனார் குருபூஜை.
29—12—87	செவ்வாய், கர்ப்போட்ட ஆரம்பம் 23-00. தருமை ஆதீனம் 11 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.
30—12—87	புதன், சர்வபீஷ்ம பரமபத வைகுண்ட ஏகாதசி.
31—12—87	வியாழன், கிருத்திகை விரதம், வேளூர்க் கிருத்திகை. தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம்.
1—1—88	வெள்ளி, பிரதோஷம். ஆங்கில வருடப் பிறப்பு.
3—1—88	ஞாயிறு, பௌர்ணமி விரத பூஜையில் பசுநெய் அபிஷேகம். இரவு ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். திருவெம்பாவை உற்சவ பூர்த்தி. திருவையாறு இரவு ஸ்ரீ மாணிக்கவாசகருக்குக் காட்சி. ஸ்ரீ சடைய நாயனார் குருபூஜை.
4—1—88	திங்கள், சோமவார உதயம். ஸ்ரீ ஆருத்ரா தரிசனம் திருவையாறு தீர்த்தம். ஸ்ரீ ஆட்கொண்டார் வடைமாலைக் காட்சி. திருக்கடவூர், திருக்குறுக்கை ஸ்ரீ வீரட்டானேசுவரருக்கு அபிஷேகம்.
6—1—88	புதன், தருமை ஆதீனம் 2 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக சுவாமிகள் குருபூஜை.
7—1—88	வியாழன், சங்கடஹர சதுர்த்தி. ஆயில்யவிழா.
9—1—88	சனி, திருவையாறு ஸ்ரீ தியாகப் பிரும்மம் 141 ஆவது ஆண்டு ஆராதனை.
10—1—88	ஞாயிறு, ஸ்ரீ இயற்பகை நாயனார் குருபூஜை.
11—1—88	திங்கள், கர்ப்போட்டநிவர்த்தி 25-02. கூடாரை வல்லி.
13—1—88	புதன், ஸ்ரீ மானக்கஞ்சாற நாயனார் குருபூஜை.
14—1—88	வியாழன், தனுர் மாத பூஜை பூர்த்தி. போகிப் பண்டிகை. மகரரவி 40-39.

Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு !

தருமை ஆதீனத்திலிருந்து திங்கள் தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமணமும் பரப்பி, சிவஞானத்தேன் வழங்கிக் கற்போர் கருத்தை வளர்த்துவருவது "ஞானசம்பந்தம்". 46 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. 47 ஆவது மலர் ஆண்டுக்கட்டணத்தை உடன் செலுத்தக் கேட்டுக்கொள்ளுகிறோம். காகிதவிலைக் கூடுதலாலும், அஞ்சல் கட்டணம் முதலிய அகவிலைக் கூடுதலாலும் சந்தாத் தொகை சிறிது உயர்த்தப் பட்டிருக்கிறது.

சந்தாதாரர்கள் தொடர்ந்து ஆண்டுக்கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர்களாகச் சேரவிரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக் கட்டணம் அனுப்பியும் சந்தாதாரர்கள் சந்தாவை உரிய காலத்தில் செலுத்தியும் உதவி புரிந்து உயர்வு பெறுவார்களாக. வேலை மிகுதியினாலோ அல்லது மறதியினாலோ ஆண்டுச்சந்தா செலுத்துவதில் தடை ஏற்படலாம். தடையில்லாமல் ஞானசம்பந்தம் பெற வாய்ப்பு அளிக்கும் முறையில் ஆயுள் சந்தா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆயுள் சந்தா அறிவிப்புச் செய்த 19—2—72 முதல் இன்றுவரையில் 1218 அன்பர்கள் ஆயுள்சந்தா செலுத்தியுள்ளனர். ஆயுள்சந்தா செலுத்தினால் அவர்களது வாரிசுகளும் ஞானசம்பந்தம் பெற வசதிசெய்துதரப்படும். மேலும் தமது ஆயுள் சந்தாவை மற்றவர்களுக்கோ கல்வி, அறநிறுவனங்களுக்கோ மாற்றிக்கொடுக்க விரும்பினால் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

[சந்தா விபரம்]

ஆண்டுச் சந்தா		ஆயுள் சந்தா	
உள்நாடு	ரூ. 17—00	உள்நாடு	ரூ. 175—00
சிலோன் உள்பட வெளிநாடு	ரூ. 45—00	சிலோன் உள்பட வெளிநாடு	ரூ. 450—00

தனிப்பிரதி விலை ரூ. 1—50

விளம்பரம்

பின்அட்டை வெளிப்பக்கம் இரண்டு நிறம் ...	ரூ. 300—00
பின் அட்டை உட்பக்கம் ஒரு நிறம் ...	200—00
இதழின் உட்பக்கம் ஒரு நிறம் ...	100—00

செயலாளர், ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மயிலாடுதுறை 609 001,
தஞ்சை மாவட்டம்.

குறிப்பு :- ஆயுள் சந்தா தொகை அனுப்புவோர் "ஞானசம்பந்தம் திங்கள் இதழ்" என்கிற பெயருக்கு டிராப்ட் எடுத்து அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10—12—87